
2005
March
PUBLIC LIBRARY
JAFFNA

உ
சிவமயம்

# அருள் ஒளி



பாரிடை ஐந்தாய்
பரந்தாய் போற்றி

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,
இலங்கை.
2005

மாசி மாத
இதழ்

மலர்
31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழா




பிரதம விருந்தினர் திருமதி கலைவாணி இராமநாதன்
(தலைவர்-இந்துநாகரிகத்துறை,யாழ்.பல்கலைக்கழகம்)
அவர்கள் அன்னையர் ஒருவருக்கு பரிசு வழங்குகிறார்.



அறப்பணி, அறிவுப்பணி ஆற்றி வரும் முதுபெரும் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் சேவையை வாழ்த்தி விருது வழங்கும் விழா நல்லை ஆதீனத்தில் பங்குனி மாதம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2005 தாரண வருடம் மாசி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் 31

மாநகர சபை, ... 2005

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகள் போற்றுதலுக்குரியவை

இந்து மதத்தவர்களிடையே சமுதாயப்பணியில் அக்கறை செலுத்தும் தன்மை மற்றவர்களைவிடக் குறைவு என்று பொதுவாக குறைகூறுவதே வழக்கமாகிவிட்டது. ஆனால் இந்து சமய நிறுவனங்கள் ஆற்றுகின்ற சமூகப்பணிகளை உதாசீனப்படுத்துகின்ற இயல்பை நாம் காணத் தவறுகிறோம். இந்து மதத்தவர்களே பொதுவாக இந்து மதத்தவர்கள் சமூகப்பணிகளைச் செய்வதில்லை என்று ஆராயாமல் குறைகூறி விடுவது பொருத்தமற்றது. சுனாமி அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானம் முதல் இலங்கையின் கடைக்கோடி அம்மன் கோவில் வரை திருக்கோவில்கள் பெருமளவில் உதவிகளைச் செய்து கொண்டு வருவதை யாவரும் அறிவோம். ஆதீனங்கள், மற்றும் இந்துமதம் சார்ந்த சங்கங்கள் ஆச்சிரமங்கள் தாராளமாக உதவி வருகின்றன. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயச்சூழலில் உன்னத பணிகள் ஆற்றிவரும் சந்நிதியான் ஆச்சிரமம் 1991க்குப் பின் இப்பகுதியில் தொண்டாற்றிவரும் உன்னத இந்து நிறுவனமாக விளங்குகிறது. தினமும் அன்னதானம் வாரத்தில் இருநாட்கள் இலவச மருத்துவம் சிறுவர்களின் பாடசாலை மாணவர்க்கு சத்துணவு ஆசிரியர் வேதனம் பல ஏழை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு விதவைகள் வறுமைக்குட்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கல் ஆன்மீக மாத இதழ் (ஞானச்சுடர்) வெளியீடு சைவத் தொண்டு மாதந்தோறும் சைவசமயப் பெருவிழா நிகழ்ச்சி என ஆச்சிரமத்தின் பணிகள் சிறப்புற்ற வகையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. சுனாமி அனர்த்தம் நிகழ்ந்ததிலிருந்து தொடக்கம் வடமராட்சிப் பகுதியில் பல ஆயிரம் மக்களுக்கு சமைத்த உணவுப் பொதி வழங்கி மகத்தான ஆற்றல் செய்த உன்னதத் தொண்டினை வாழ்த்தாதவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் இல்லை. இன்று அகதிமுகாம்களில் இருக்கும் மக்களுக்கு இந்நிறுவனம் உதவிக் கொண்டு இருக்கிறது. சந்நிதிச்சூழலில் பலமடங்கள் செய்த தொண்டுகள் ஓய்ந்த போதிலும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் தொண்டு இன்னும் எந்நாளும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை ஐயா முதல் மகப்பேற்று நிபுணர் திருமதி பவானி அவர்கள் கண்வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி ச. குகதாசன் வரை ஆச்சிரமத்தில் நடைபெறும் மருத்துவப் பணிக்கு தாமே முன் வந்து இலவச வைத்தியம் செய்து வருவது எமது சமயத்துக்கு பெருமைதரும் விடயமாகும். சந்நிதியான் ஆச்சிரமத்தின் மகத்தான தொண்டினை நேரில் தரிசித்தவர்கள் அறிந்தவர்கள் மிகுந்த பாராட்டு கூறி வருகின்றனர். உலக நாடுகளிலுள்ள நம்மவர்கள் இந்நிறுவனம் ஆற்றும் பணிகளை பாராட்டியவண்ணமுள்ளது. ஆச்சிரமத்தை நெறிப்படுத்திக் காக்கும் மோகனதாஸ் சுவாமிகளின் அயராத தொண்டினை அனைவரும் ஒப்புக்கொள்வர். அன்னை சிவத்தமிழ்செல்வி அம்மா அருட்கவி சி. விநாசித்தம்பி ஐயா நல்லை ஆதீன சுவாமிகள் அனைவரும் ஆச்சிரமத்தின் செயல்களும் செய்கைகளையும் வாழ்த்திய வண்ணமுள்ளனர். இந்துமதத்தவர்களாகிய நாம் இத்தகைய நிறுவனத்தின் பணிகளை மனதார வாழ்த்துவோம்.

**- ஆசிரியர்**


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள் உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்துக் ஒப்புதல் தாருங்கள்.**




**தொடர்புகளுக்கு:**
**ஆறு.திருமுருகன்**
தொலைபேசி
021-222 6550

**கண் வைத்திய நிபுணர்கள்:**
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr. சிவந்தா, 021-222 3149**
யாழ்.போதனா வைத்தியசாலை


## "அருள்ஒளி" வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

"அருள்ஒளி" மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான தரமான ஆக்கங்களை நாம் எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்
**"அருள்ஒளி"**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்
**"அருள்ஒளி"**
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனை நிறைந்த சோதனையிலும் சாதனை புரிந்த தூண்டு தவ விளக்க அன்னையார்

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

**"உலகில்வரு மிருணீக்கி யொளிவிளங்கு**
**கதிர்போற்பின்**
**மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்வதற்குச்**
**சிலமுறையாண் டகல்வதற்கு முன் திலகவதியார் பிறந்தார்"**

திலகவதியாருடைய தந்தையார் புகழனார், மாதினியார் தாயார், தம்பியார் மருணீக்கியார், மருணீக்கியார் பின்னர் மங்காப் புகழால் மாநிலம் போற்றும் திருநாவுக்கரசு நாயனார்.

**"நாவுக் கரசென் றுலகே ழினுநின்**
**னன்னா மநயப் புறநண் ணுகவென்று"**

மாற்றார் புரமாற் றியவே தியரால் நாயானாருக்கு அருளப்பெற்ற காரணப் பெயர் நாவுக்கரசு.

திலகவதியார் அழகில் திருமகளுக்கு ஒப்பானவர். செல்வத்தில் கொஞ்சமேனும் குறைவில்லாதவர். கல்வியில் மேம்பட்டவர். புகழில் திகழ்ந்தவர் தந்தையார் புகழனார் என்ன இருந்தும் என்ன?

திலவதியாரைப் பின்தொடர்ந்த வேதனை விலகியதா? இல்லை அது மேலும் சோதனைக்கு ஆளாக்கியது........... எல்லா வித வாதனையையும் தூரத் தள்ளித் தம்பியை உருவாக்கும் சாதனையைப் புரிந்தார். வெற்றியும் கண்டார். திலகவதியார் தமிழ்ப் பெண்மைக்குரிய குணங்கள் அத்தனையும் பொருந்தப் பெற்றவராதலினால் வேதனையும் சோதனையும் சேய்மையானது சாதனை அண்மையானது.

திலகவதி அம்மையார் சஞ்சலத்தில் சிக்கித் தடுமாறும் தமிழ்ப் பெண்களுக்குப் பெற்ற தாய்போல்வார். உடன் பிறந்த அன்பு மிக்க சகோதரி ஆவார். அபலைகளுக்கு ஒளி காட்டும் கலங்கரை விளக்க அனையார்.

திலகவதியாருக்கு ஈராறு ஆண்டின் முன்னாகத் தந்தையார் தகுந்த திருமணம் பேசி வைத்தார்.

மணவாளர் கலிப்கையார் மணம் முடிப்பதற்கு முன்னாக அரசனுக்குச் சேனாபதித் தலைமை பூண்டதனால் போர் மேல் புறப்பட வேண்டியதாயிற்று.

திலகவதியார் மணவாளர் வெஞ்சமத்தில் விடைகொண்டு சென்றார். அங்கே நீண்டநாள் போர்த்தொழிலை மேற்கொண்டார் கலிப்பகையார்.

இங்கே தந்தையார் புகழனார், இவ்வுலகை விட்டகன்றார். மனைவியார் மாதினியார் மக்களை மதியாமல் கணவனாருடன் சென்றார்.

திலகவதியார் பிதா மாதாக்களைப் பிரிந்த பெருந் துயர் ஆறுவதற்கு முன் பின்னொரு பெருந்துன்பம் முன் வந்து நின்றது.

கலிப்பகையார் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்டார்.

திலகவதியாருக்குத் திருமணம் நிகழாதிருந்தாலும் பெற்றோர் மணம் பேசி வைத்தவருக்கே தான் உரித்து என்று உயிர்விடத் துணிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருணீக்கியார் திலகவதியாருடைய திருவடிகளை ஓடி வந்து இறுகப்பற்றுக் கொண்டார்.

"அக்கா? என்னைத் தனிக்க விட்டால், உம் முன்பு நான் உயிர் நீப்பேன்" என்று சொல்லி அழுது புலம்பினார் அன்புத் தம்பி.

திலகவதியார் என் செய்வார்? ஒரு பக்கம் பேசி வைத்த கணவனாருடைய பிரிவு. எதிர்ப்பக்கம் தம்பியார் மேல் வைத்த பரிவு. இரண்டும் பாசப் பிரிவும் பாசப் பரிவும் எந்தப் பக்கம் சார்வது?

அந்தத் தமிழ்ப் பெண்ணுள்ளம் ஒரு முடிபிற்கு வந்தது.

"தம்பியா ருளராக வேண்டும்" எனத் தயா வைத்தது. விண்ணுலகு ஏகுவதை விலக்கியது. உடலில் உயிர் தாங்கியது. அம்பொன்னை அகற்றியது. அனைத்து உயிர்க்கும் அருளைத் தாங்கியது.

திலகவதியார் இவ்வுலகில் தவம் புரிந்து மனையில் இருந்தார்.

அவ்வளவோடு திலகவதியார் துன்பம் தீர்ந்தார். திலகவதியார் எந்தத் தம்பிக்காக தன்னுயிரைத் தரித்து இருந்தாரோ அந்தத் தம்பியார் தமக்கையாரை உதறிச்சென்றார். சிவவழிபாட்டை மறந்தார் மருணீக்கியார். பரசமயப்படு குழியில் போய் வீழ்ந்தார். திகைத்தார் திலகவதியார். பெரும் இனசன சுற்றத்தவருடைய பழிப்புரைகளைப் பொறுக்க மாட்டாதவராய் திருவதிகைக்குப் புறப்பட்டார்.

திலகவதியார் சென்று திருவீரட்டானத்திருந்த செம்பவளக் குன்றை அடி பணிந்தார்.

திலகவதியார் வெண்ணூலும் வெள்ளாடையும் தரித்து வேதனையில் மாழ்கினார். மருணீக்கியார் மாற்றுச் சமயத்தார் வழங்கிய தருமசேனர்ப்பட்டக் கொடியைப் பறக்கவிட்டார். உடன் பிறந்த சகோதரர்கள் இடையே இப்படியும் ஒரு சங்கடம் ஏற்பட்டால் சகோதரர் பாசம் தலை எடுக்குமா? அன்பு வளருமா? பண்பு படருமா? பாசம் பஞ்சாகப் பறக்காதா?

திலகவதியார் உள்ளம் உருக்குலையவில்லை. திருவதிகை வீரட்டானப் பெருமானுடைய திருவடியைப் பற்று அறாது பற்றிக் கொண்டார்.

"அடியேன் பின் வந்தவனைப் பரசமயக் குழிநின்றுமெடுத்தாள வேண்டும்" என்று பலமுறையும் விண்ணப்பஞ் செய்தார்.

அந்த நல்ல உள்ளத்தின் அருச்சனை அவம் போகவில்லை சிவபெருமான் திருவருளால் தருமசேனர் திருநாவுக்கரசு நாயனார் ஆனார். திலகவதியார் கொண்டு அலையாத உறுதி சைவப்பேருலகிற்கு ஒரு பெரியவரை உருவாக்கித் தந்தது.

திலவதியார் கொண்ட மன உறுதி எம் போன்றோருக்கு நல்ல படிப்பினை.

நல்ல காரியத்தில் ஈடுபடும் நம்மவரும் நீண்ட நாள் கொண்ட உறுதியில் நிலைகொள்ள உள்ளம் இடம் தராது. அதனால் நினைப்புச் செயலில் வெற்றி பெறுவதில்லை.

திலகவதியாருடைய உள்ளத் தூய்மையும் உயர் கொள்கையும் சைவப் பேருலகில் சாதனை புரியும் தமிழ்ப் பெண்களுக்கு ஒரு வழிகாட்டி. தூரத்தில் தெரியும் ஒளிவிளக்கு; தூண்டுதவ விளக்கு

திலகவதியார் சுயநலம் கருதாச் சேவையும் தூய அன்பும் என்றும் வேண்டும் நீடாழி உலகத்தில் என்றும் நின்று நன்றே நிலவுக.

சிவநெறி சார்ந்த பவநெறி பாராத தவநெறித் தலைப்படும் தமிழ்த் தாய்க்குலம் தலைப்படும் சால்பிற்குரியவர் தெய்வத் தன்மை வாய்ந்த திலகவதி அம்மையார் என்பதில் ஐயமில்லை. **வாழ்க சிந்தனைத் தெளிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாயிலார் நாயனார்

**க. சிவசங்கரநாதன்**
சரசாலை

மனிதன் மனம் வாக்கு காயம் என்னும் மூன்று கரணங்களினாலும் செயல் புரிகிறான். நினைப்பு பேச்சு செயல் என்று அக்கரணங்களின் இயக்கத்தைக் குறிப்பது வழக்கம். இந்த மூன்று கரணங்களும் மனிதனுடைய பிறப்பின் சிறப்பை எடுத்துக் காட்டுவன போல மற்ற உயிர்களிடம் இருப்பனவற்றை விட மிக மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. அம்மூன்றிலும் அவனது மனம் பெற்ற வளர்ச்சி மிகவும் அற்புதமானது. மனத்தின் ஒரு பகுதியே அறிவு அது மனிதனிடத்தில் மிகவும் நுட்பமாகவும் விரிவாக அமைந்திருக்கிறது. "நுண்மான் நுழைபுலம் என்றும் அஃது அகன்ற அறிவு என்றும் மனித அறிவைப் பாராட்டிப் பேசுவார்கள் புலவர்கள். உடம்பாலும் வாக்காலும் செய்யும் செயல்களால் அடையும் பெருமையைவிட உள்ளத்தால் செய்யும் செயல்களே மனிதனுக்கு அதிகப் பெருமையை உண்டாக்குகிறது. முன்னுள்ள அநுபவத்தையும் நிகழ்காலச் செயல்களையும் வருங்கால விளைவுகளையும் உணர்ந்து நலந்தீங்குகளை நாடி ஆராயும் ஆற்றலை மனிதன் படைத்திருக்கின்றான் ஆதலின் உள்ளத்தினால் மேலும் உயரும் நிலையில் இறைவன் அவனை வைத்திருக்கிறான் இறைவனை மனமொழி மெய்களால் வணங்கவேண்டும்."

**"வாழ்த் வாயும் நினைக்க மடநெஞ்சும்**
**தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்"**

என்று திருநாவுக்கரசு நாயனார் அருளினார். உடம்பால் வணங்கி வாயினால் வாழ்த்தி மனத்தால் தியானம் செய்யவேண்டும் உடம்பால் வணங்குவது எளிது அதைவிட அரிது புகழ்பாடுதல் அதையும் விட அரிது தியானித்தல் காயிகம் வாசிகம் மானஸம் என்ற மூன்று தொண்டுகளில் மானஸீகம் சிறந்ததென்று நூல்கள் கூறும் மானசிக பூஜை சிறந்ததென்பதைப் பெரியோர்கள் வாக்கால் தெரிந்து கொள்ளலாம். உள்ளத்தால் செய்வனவற்றின் பெருமையைத் தெரிவிக்க ஒரு கதை சொல்லுவதுண்டு.

ஒரு நாள் அருச்சுனன் கைலாசத்தின் வழியே சென்று கொண்டிருந்தான். அங்கே இருந்த சிவகணங்கள் நிலவுலகில் பூசை புரிவார்கள் இட்ட நிர்மாலியத்தை வாரி வெளியிலே கொட்டிக் கொண்டிருந்தார்கள். வில்வமும் பலமலர் வகைகளும் மலைபோல் குவிந்திருந்ததைப் பார்த்தபோது இது நம்முடைய பூசையின் நிர்மாலியம் என்று அருச்சுனன் நினைத்தான் சிவகணங்களை நோக்கி இது யார் செய்த பூசையின் நிர்மாலியம் என்று கேட்டான் பூலோகத்தில் பஞ்சபாண்டவர்கள் என்று ஐந்துபேர்கள் நல்ல சிவபக்தர்கள் அவர்களின் ஒருவன் பூசையில் போட்டது என்றார்கள் அவனுக்கு சற்றே பெருமிதம் உண்டாயிற்று. அவன் பெயர் என்ன?

வீமனாம் இந்த மலையைப் போல அந்தப் பக்கம் இன்னும் குவிந்து கிடக்கிறது என்றார்கள் சிவகணங்கள்.

வீமனா!! அருச்சுனனுக்கு வியப்புத் தாங்கவில்லை. அந்த அண்ணா உட்கார்ந்து சிவபூசை பண்ணியதாக நமக்குத் தெரியவில்லையே என்று எண்ணமிடலானார். அவன்பிறகு அருச்சுனன் என்பவன் பூசா நிர்மாலியம் எது? என்று கேட்டான் அது அளவிடற்கரிய பெருமலையாக இருக்கிறது என்ற விடையை எதிர்பார்த்தான். அவர்களோ அதுவா? அங்கே ஒரு குடலையில் இருக்கிறது என்று அலட்சியமாக சொன்னார்கள். அருச்சுனனுக்கு தூக்கிவாரிப் போட்டது. அவன் மனம் சுழன்றது வீமன் செய்ததை நான் பார்த்ததில்லையே என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனத்தினாலே பூசை செய்கிறவன் ஒரு நந்தவனத்தைக் கண்டால் அங்குள்ள அத்தனை மலர்களையும் பத்திரங்களையும் சிவபிரானுக்கு என்று மனத்தால் அர்ப்பித்து விடுவான் அது இங்கே மலையாகக் குவிந்து விடும் அருச்சுனனுக்கு மானசிகபூசையின் சிறப்பு நன்கு புலனாயிற்று. மயிலாப்பூரில் இவ்வாறு உள்ளத்தால் பூசை இயற்றிய அன்பர் ஒருவர் இருந்தார். அவரை வாயிலார் நாயனார் என்பர். வேளாண்குடியில் தோன்றிய அவர் சிவபிரானை உள்ளத்தால் வழிபடும் திருத்தொண்டிற் சிறந்து விளங்கினார். மனத்துக்குள் தியான முறையில் கோயில் கட்டிப்பூசை செய்தார். மறவாமையால் மனக்கோயில் அமைத்துச் சிவபிரானை உள் இருத்தி ஞான விளக்கு ஏற்றி ஆனந்தம் என்னும் திருமஞ்சம் ஆட்டி அன்பு என்னும் அமுது அமைத்து அருச்சனை செய்து வந்தார். புறத்தே காணும் மலர் மஞ்சனம் அமுது முதலிய பொருள்களை வைத்து வழிபடும் போதே நமக்கு மனம் பலவாறாகச் சிதறுகிறது. அவருக்கோ மனத்தில் நினைத்தது அப்படியே சின்றது அதாவது எணணியதை மறப்பதில்லை. தூய உள்ளமாதலின் ஒருமைப்பாட்டோடு எண்ணிய எண்ணம் நன்றாகப் பதிந்தது. அதனால் செய்வதிலே நெடும் பொழுது கழித்தார். மானசிக பூசையில் காலம் போவதே தெரியாது மனம் ஒருமைப்பாடு இல்லாமல் இருந்தால் சிறிது காலமும் நெடுங்காலமாகத் தோன்றும். ஒருமைப்பட்டால் நெடுங்காலமும் குறுகிவிடும் தியானத்தால் காலத்தை வெல்லலாம் என்பதற்கு இது தான் பொருள் ஆகும்.

வாயிலார் இந்தச் சிவவழிபாட்டை நெடுநாட் செய்து அதன் பயனாகிய இன்பத்தை நுகர்ந்து சலனமற்ற அமைதியான வாழ்க்கையிலே சிறந்து விளங்கினார். யாமும் அறுபத்து மூன்று நாயனார் சரித்திரத்தை கூறும் பெரிய புராணத்தை சிறிதளவாவது சிந்தித்து நாயன்மார் கடைப்பிடித்ததை ஓரளவாவது பின்பற்றி நல்வாழ்வு வாழ்வோமாக.

## அருள்விருந்து

- ❒ அச்சம் ஆபத்துக்களை வலிய வரவழைத்து விடுகிறது. அறிவாளனுக்குப் பொன்றாத பொக்கிஷமாயிருப்பது நல்லறிவு.
- ❒ உழைப்பின் மூலமாயன்றி ஒருவரும் இன்பத்தைப் பெறமுடியாது.
- ❒ இயற்கையை முறையாக ஆராய்பவன் படிப்படியாக ஈசனுடைய சன்னதி போய்ச் சேருவான்.
- ❒ உள்ளத்தில் எழும் எண்ணத்தை உலகுக்கு எடுத்து வழங்குவதற்குக் கருவியாயிருந்து உதவுவது மொழி.
- ❒ வாழ்க்கையில் வாய்க்கும் நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் சாஷியாய் இருந்து பழகுவதே நல்ல மன நிலையாகும்.
- ❒ இறைவனிடம் நாம் நேரே பறந்து செல்வதற்குச் சிறகால் நம்மிடம் அமைந்திருப்பது சீரிய ஞானம்.
- ❒ நல்லெண்ணம் படைத்திருப்பவரே நெஞ்சம்நிறைந்து பொங்கித் ததும்ப நகைக்க வல்லவராகின்றனர்.
- ❒ மனிதன் எதைக் குறித்து மகிழ்வுறுகிறானோ அதினின்று அவனது தரம் அல்லது பண்பாடு வெளியாகிறது.
- ❒ பிணத்தைச் சுட்டு விடுகிறோம். அல்லது புதைத்து விடுகிறோம் அங்ஙனம் பயன் படாத பழைய கொள்கைகளைப் புறக்கணித்துவிடு.
- ❒ சூரியன் உதயமாகும் பொழுது பனி மறைந்து போய் விடுகிறது. மகிழ்வு மனதில் உதயமாகும் பொழுது மனக்கோணல் தானே மறைந்து போய் விடுகிறது.
- ❒ கூண்டைக் கலைத்து விட்டால் பறவை வெளியே பறந்துபோய் விடுகிறது. உடல் கூற்றை ஞானத்தால் கலைத்து விட்டால் ஆத்மன் சிதாகாசத்திற்குப் பறந்து போய்விடுகிறது.

[தர்மசக்கரம்; சக்கரம்-8; விகாரி வருடம் கார்த்திகை மாதம்; ஆரம் 11; பக்கம்-402; அருள் விருந்து. 1959ஆம் ஆண்டு சூசிரியா; சுவாமி சித்பவானந்தர்; ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் (ராமகிருஷ்ண மிஷன்).]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி கல்லாமை கேள்வி அறிவுடைமை

**திருமதி திருப்பதி இளம்பிறையாளன்.**
கனடா

மனித சமுதாயத்தின் விழுமியங்களைக் கட்டி வளர்க்கப் பல செயற்பாடுகள் உபகாரியாம் தன்மையுள்ளன. அவற்றுட் பிரதானமானது கல்வி. இது பூப்பந்தில் வாழும் மனிதத்துக்கு இன்றியமையாதது. வேறெவ்வுயிர்க் குலங்கட்கும் கல்விநெறி, கற்கைச் செயற்பாடு இயைபதாம் இல்லை. மொழி, சமூகப்பிரிவு, நிறம், நாடு, குலம் இவற்றையெலாந் தாண்டி குறைந்தது மனிதனை மனிதனாக வைத்திருப்பது கல்விப் பாரம்பரியமே. இந்த ஊற்றுக்கண் ஊர்தோறும் வாழ்ந்த கல்விவல்லாரின் கைகளிலேதான் அமைந்திருந்தது. காலம் மாறக்கல்வி இயக்கமும் மனிதத்தோடு கலந்து விட்டமை கண்கூடு. வெளிநாட்டுத் தொடர்புகள் ஊடகங்கள் விஞ்ஞான வளர்ச்சி போன்ற அமைப்புகள் மனித சமுதாயத்தை ஒன்றாக்கி விட்டமை இன்றைய சூழ்நிலையாகும். மனிதம் பகுத்தறிவுப்பண்ணையென்னும் தொட்டிலில் சீராட்டப்பட்டது. சுமார் இரண்டாயிரமாண்டுத் தொன்மையான திருக்குறளில் நான்கு அதிகாரங்கள் அடுக்காக அமைந்துள்ளன. அவைதான் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமையென்பன. உடைமையென்றாற் செல்வமென்னும் அதைப் பொருந்தியவராய் இருத்தலையும் குறிக்கும். உடைமையென்ற பிரயோகங்களைத் திருக்குறளிற் பரக்கக்காணலாம். சொத்தையும் உடைமையென்பர். திருக்குறளிற் பேசும் இப்பொருட் சிறப்பு வேறெங்கும் காணமுடியாது. திருமந்திரத்தில் கல்வி கேள்வி கல்லாமையென்ற பிரயோகங்களையும் நாலடியாரிற் கல்வி, அறிவுடைமையென்ற அதிகாரங்களையும் காண்கிறோம். விஞ்ஞானம் மனிதனைப் பலவாறு உரைத்தும் பார்த்து அவனைச் சமூகப்பிராணி, சமுதாய விலங்கு, அரசியற் பிராணி என்றெல்லாம் வர்ணிக்கிறது. ஆனால் நம் தமிழிலக்கியங்களும் பக்திப் பனுவல்களும் அப்பிறவி எல்லாப் பிறப்புகளிலும் மேன்மையுடையதெனக் கூறுகின்றன. ஆறாவது அறிவான பகுத்தறிவு மனிதப் பிறவிக்குத்தான் உண்டு. எனவே அவ்வையாரில் இருந்து பாரதி வரை மனித்தப்பிறவி மிகமிக உயர்ந்தது என எழுதி வைத்துள்ளனர். அப்பரோ கூத்தப்பிரானைக்காண இப்பிறவியொன்றினாலே தான் அமையும். எனவே “மனித்தப்பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே” என்று பொன்னெழுத்துகளிலே பொறித்துள்ளார். சுமார் பதினேழாம் நூற்றாண்டவரான தாயுமான சுவாமிகள் இதைச் சிறிது மாற்றி எம் மனசிலே படியும்படி கவி செய்துள்ளார்.

**எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்**
**யாதினும் அரிது அரிது காண்**
**இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?**
**ஏது வருமோ? அறிகிலேன்.**

தாயமானவர் பாடல் சித்தர்கணம் 4

ஆக கிடைத்த மனிதப்பிறவியை நாம் பயன்படுத்தல் உசிதம் என்பதை உள்ளத்திற் பதிப்பது முக்கியம். “வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்” என்பது அப்பர் வாக்கு. இதை மதிப்பவர் சொர்க்கப்பதியையடைவர். பிறப்பின் இறுதி இலக்கு அது கல்வியின் கருதுகோளும் அ∴தேதான் என்பர் வள்ளுவர்.

**கற்றதனால் ஆயபயனென்கொல் வாலறி வன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

கடவுள் வாழ்த்து 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனது நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால் அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன? என்ற வினாவிற்கு விடை ஒன்றுமே இல்லை என்பதாகும். அரிது மானுடராதல் அரிது என்ற ஔவையும் ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது என்பார். எனவே கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுக்காயினும் கற்கை நன்றே எனப்பாண்டியனொருவர் கூறினார். கற்றோர்க்குச் சென்றவிடம் எல்லாம் சிறப்பு அறிவுடையோனாறு அரசும் செல்லும். ஒருதாய் வயிற்றிற் பிறந்த நால்வருள்ளும் மூத்தவனை வருகவென்று வெகுசனசபை வரவேற்காது. அவர்களுள் படித்தவனுக்கே முன்னுரிமை வழங்கப்படும். நான்கு புருஷார்த்தங்களைத் தருவது கல்வி. வெளியிலே கீர்த்தியையும் மதிப்பையும் அளிப்பது கல்வி. துன்பம் வந்துற்ற வேளை கைதூக்கி விடுவதும் கல்வி. எனவே கல்வியிற் சிறந்தது வேறொன்றும் இல்லை.

**அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்**
**புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கவலொன்று**
**உற்றுழியும் கை கொடுக்கும் கல்வியின் உளங்கில்லைச்**
**சிற்றுயிர்க் குற்ற வனை.**

படிப்பது மனம் படிவதற்குத்தான் என்பர் திருவாசக சுவாமிகள். படிப்பது எவ்வளவு இன்றியமையாததோ அதிற் பன்மடங்கு படித்த படி நடப்பது அதிமுக்கியமானது.

கல்வி யாவர்க்கும் பொதுவான சொத்து. ஆண்களோடு பெண்களும் சமானமாக இப்பூமியில் வாழக் கல்வியத்தியாவசியமானது. நம் காலப்புலவர் பாரதிதாசன் "படியாத பெண்ணாய் இருந்தால் கேலி பண்ணுவார் உன்னை இவ்வூரார் தெரிந்தால் எனவே மலைவாழையல்லவோ கல்வி வாயார உண்ணுவாய் (பாடசாலை) போயென் புதல்வி கடல்சூழ்ந்த இத்தமிழ்நாடு பெண்கல்வி பெண்கல்வி என்று ஒலிக்கிறது." என்றும் பாடினார். விவேகானந்தர் காந்தியடிகள் பெண்கல்வியின் அத்தியாவசியத்தை இடித்துப் பேசினார். அறுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட நாலடியாரம் பெண்மையின் கல்விபற்றிப் பேசாமல் இல்லை.

**குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வியழகே அழக.** நாலடியார் பொருட்பால் கல்வி 1

இப்பாடலிலே அமைந்துள்ள (நெஞ்சத்து) மனத்தாலே நாம் நல்லவர்களென்ற தற்துணிபைத் தருவது கல்வி அது தராசுபோல் நடுவுநிலைமை வகிக்கவும் உதவும் என்ற பொருள் பொதிந்த கருத்தை நாம் உளம் கொள்ளல் வேண்டும். (கறுத்துச் செறிந்த கூந்தலின் அழகும், கொய்யக மடிப்புச் சேலையின் கோடுகளின் வடிவும், பொன்போன்ற மஞ்சட்பூச்சின் முகஅழகும் உயர்ந்தோரால் அழகெனப்படமாட்டா நடுவு நிலையுடன் "யான் மனத்தினால் நல்லவன்" என்ற நிறைவை உண்டாக்கும் கல்வியழகே ஒருவற்கு அழகாம்) என்பது இப்பாடற் பொருளாம்; இந்த நடுவு நிலைமையை வள்ளுவனார் வாக்கிற் காண்பாம்.

**சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந் தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி**

திருக்குறள் 12-9

இதற்கு உரை வகுத்த பரிதியார் ஒரு விசேடத்தைக் குறிப்பிடத்தவறவில்லை. முன்னேதான் சமனாக நின்று பின்தன் கண்வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாக் போல் ஒருமாற்கோடாமை சான்றோர்க்கணி என்பர். சமுதாயப் பாங்கிலே ஒவ்வொருவரும் நாம் நல்லவர்களா. கெட்டவர்களா எனத் தட்டிப்பார்க்க மனச்சான்று (மனச்சாட்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவர்களாய் வாழவேண்டும் இதற்கு இயல்பறிவோடு கல்வி ஞானமும் தேவை. நான் நல்லவன் என நமக்குள்ளே பேசுவதோடு உலகம் நம்மைப் பார்த்து உத்தமர் என்று சொல்லத்தக்கதாய் நாம் வாழ வேண்டும். சமுதாயக்கண்ணோட்டத்தில் கல்வி இன்றியமையாததாகும். எனவே தான் வள்ளுவனார் என்றும் அழியாத செல்வம் கல்விதான் எனப் பேசுகிறார்.

**கேட்டில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

திருக்குறள் 400

ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி, அஃதொழிந்த மணியும் பொன்னு முதலியன செல்வமல்ல. மாடு-செல்வம் விழுச்செல்வம்-உயர்ந்த செல்வம்

பரிலேழகர்

கல்வியைத் தொடர்ந்து வருவது கல்லாமை. மனிதன் பகுத்தறிவு வாதி. எனவே அவன் மிருகமாகவோ பறவையாகவோ பிராணிகளாகவோ தாவரமாகவோ வாழல் சாலாது. எனவே படிப்பின் உன்னதமான நிலைமையை உணர்த்த மனிதத்தை விலங்கோடு ஒப்பீடு பண்ணி படியாத படித்தவர் தரங்களை விளக்கியுள்ளார் தமிழ் வேதம் தந்தவர்.

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனையவர்**

திருக்குறள் 410

ஔவையார் சபை நடுவே நீட்டோலை வாசியான் நின்றான். மரம் என்றார். ஆக, மனிதனாய்ப் பிறந்தும் மிருகமாகவோ மரமாகவோ வாழக்கூடாது. அது வாழ்வும் ஆகாது எனவே பாடசாலை சென்று கல்வி கற்க வேண்டுமென்ற உண்மை இதனால் வெளிப்படையாகும். இவ்விரு (கல்வி-கல்லாமை) அதிகாரங்களும் கல்வியின் முக்கியத்துவத்தை நமக்குப் போதிக்கின்றன எனலாம். சரி படியாவிட்டாலும் கேள்வி ஞானத்தையாதல் பெறத்தவறாதீர்கள் என்கிறது அடுத்த இயல்.

**கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை** திருக்குறள் 414

ஒற்கம்-தளர்ச்சி, ஊற்றாம்-பற்றுக்கோடாம் நூல்களைக்கற்க வில்லையாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறிதல் வேண்டும். அஃது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்த போது ஊன்றுகோல் போல் துணையாகும். எனவேதான் செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் என இந்த அதிகார முதற்பாடல் அறிவுரை புகட்டுகிறது. சுருதி, யுக்தி, அனுபவம் மூன்றும் ஒருவனைத் தலைசிந்தவனாக்கும். அனுபவமே சிறந்த ஆசான். பள்ளித்தாவரத்தையே காணாத பலர் கேள்வியாற் கல்விமான்களாயினர். பல சங்கீத மேதைகள் கேள்விஞானத்தாற் பிரபல்யமான (சங்கீத) மேதைகளாயினர். கிருபானந்தவாரியார் சுவாமிகளின் ஒருநாட் பிரசங்கம் எமக்கு எவ்வளவு மேன்மையை அள்ளித்தந்தது. பன்னூல் அறிவு பல அனுபவம் கேள்வியால் நம்மை வந்தடைகின்றன. ஆக அறிவுடையை ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாதது ஆம் இந்த அறிவின் துணை கொண்டு நாம் உயர்ந்த வாழ்வுகாணலாம் என்ற உண்மை அடுத்த அதிகாரத்தால் அறியக்கிடக்கிறது.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்**

திருக்குறள் 430

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்ப தறிவு** மேலது 422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவின் வழி சான்றோராய் வாழவும் மற்றவர்களை வாழ வைக்கவும் இது நல்லது இது தீயது எனக்கண்டு நம்மை மேம்பாடடையச் செய்யவும் அறிவு நமக்கு நல்ல கைவிளக்காகும். வள்ளுவம் தரும் சிந்தனைகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் ஒளி விளக்காகும் (கலங்கரை விளக்கம்)

இச்சிந்தனைப் பார்வையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து காட்டிய சமுதாயச் சிற்பியாய்த் திகழ்பவர் ஆறுமுகநாவலர் பெருமான். அவருடைய ஆளுமைகள் கல்வித்திறத்தாலும், முயற்சியாலும், தன்னம்பிக்கை, ஓர்மம், செய்றிறன் தாயகப் பற்றினாலும் வந்ததே. இவரது பெருமையை எண்ணி எண்ணி வியக்கிறார் இளமுருகனார்.

**வேற்றுச் சமய விருண் மண்டி**
**மேலாஞ் சைவம் குன்றியநாள்**
**வேத மெழுந்து வாய்வீண்டே**
**மெய்ம்மை நிறுத்தி நின்ற தெனப்**
**போற்று மறிவுக் கதிரொளியாற்**
**போகாப் புன்மை போக்கியருட்**
**போது மலர்த்தித் தெய்வமணம்**
**புறத்து மகத்துங் கமழ்வித்தே**
**ஆற்றா தலந்த தமிழன்னைக்**
**கருமை யுரைநூற் கலன்பூட்டி**
**அரசு கட்டின் மிசைவைத்த**
**ஆறுமுகநா வலரையா!**
**தேற்றங் காணா திலங்கையிலே**
**தேம்பு மன்னாள் திறத்திரங்கிச்**
**செல்வா! காக்க வருக எனச்**
**செவ்வே கூவாய் பூங்குயிலே!**

பண்டிதர் இளமுருகனார்

நமது மண்ணிலே மட்டுமன்றி தென்பாரதத்திலும் அரும்பணியாற்றி தமிழும் சைவமும் பேணிக்காத்து மீண்டும் மக்கள் மத்தியிலோ (வந்தேறிகளின் சூழ்ச்சியால் பரலோக சிந்தனைக்குட் தம்மினம் மூழ்காமல்) மொழியையும் சமயத்தையும் நிலைநாட்டியவர் ஆறுமுகநாவல சற்குருநாதசுவாமிகளேயாம். முதலிற் தன்னை பல்லாற்றானும் வலிமையுடையவனாக்கிக் களத்திலே புகுந்தார் நல்ல அறுவடை கண்டார். நல்ல நிறைவேற்றதிகாரம் மிக்க சேனாதிபதியாய் எதிர்ப்புப் படை நடத்திய முதல் மகன் அவர் அதற்காக அவர் மேற்கொண்ட உத்திகள் வள்ளுவன் வழிதான். கல்வியை நிலைநாட்ட முதல் கல்விக்கூடங்களை இங்குமங்கு அமைத்தார். பிரசங்கமார்க்கத்தையும், புராண படனங்களை பட்டிதொட்டி தோறும் நடைமுறைப்படுத்தினார் பாடநூல்களை கண்டனங்களை எழுதி வெளியிட்டார். தொன்மையான கருவி நூல்களைப் பிழையின்றிச் செம்பதிப்பாய் வெளியிட்டார். இலக்கண-இலக்கிய-புராண ஏடுகளை அச்சுவாகனமேற்றி வசன நடையை அறிமுகம் செய்து பவ்னின (தமிழ்மொழி) அறிவை வளர்த்தார். பல எதிர்ப்புகளை ஓர்மத்தோடு வெட்டி வீழ்த்தி கிறீஸ்தவர்களை வெற்றிகண்டார். அன்னாரின் 125ஆவது குருபூசைத்தினம் அண்மித்த இச்சந்தர்ப்பத்திலே அவருக்கு விழா வெடுப்பதால் எம்மை உயர்த்திக் கொள்வோமாக. பரசமய வேகத்தைத்தணிப்போமாக.

**தமிழ்க்குலம் உலகம்புகழ் எய்த தாழாது உஞற்றுங்கள்**
**அது ஒன்றே எனக்குத் தமிழர் செய்யும் கைம்மாறு**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மேன்மை

குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

**சை**வசமயம், இறைவன் ஒருவனே என்று கூறுகிறது. சிவபெருமான் என்று அந்த இறைவனைச் சைவம் அழைக்கிறது. ஏனைய தெய்வங்கள் யாவும் சிவபெருமானின் மூர்த்தங்கள். அதனால் அத்தெய்வங்களும் எமது வழிபாட்டிற்கு உரியவையே. விநாயகர், முருகன், அம்பாள், வைரவர், விஷ்ணு எனப் பல கடவுளர்களை நாம் வழிபாடு செய்கின்றோம். "யாதொரு தெய்வங் கொண்டீர், அத் தெய்வமாகியாங்கே, மாதொருபாகனார் தான் வருவர்" என்று சிவஞானசித்தியார் குறிப்பிடுகிறது. நாம் எந்தத் தெய்வத்தை இஷ்டதெய்வமாக வணங்கினாலும், நாம் வணங்குவது பரம்பொருளாகிய சிவபெருமானையே ஆகும்.

இறைவன் உயிர்களோடு ஒன்றாய், உடனாய், வேறாய் உள்ளான் என்று சைவம் கூறுகிறது. இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும், எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்தும் வியாபித்தும் உள்ளான் என்பதை ஏற்றுக்கொள்ளும் நாம், எல்லா உயிர்கள் மீதும் அன்பாய் இருக்கவேண்டும். நாம் கடவுளில் அன்பாய் இருக்கிறோம் அந்தக் கடவுள் எல்லா உயிர்களிடமும் வதிவதை நாம் சந்தேகமின்றி உணர்கிறோம். ஆகையால் எல்லா உயிர்களிடத்திலும் நாம் அன்பு செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறு செய்யாவிட்டால், கடவுள் மீதும் நாம் அன்பு கொள்ளாதவர் ஆகிவிடுவோம்.

கடவுள் எங்கும் எதிலும் நிறைந்துள்ளவர் என்னும் தத்துவத்தை ஏற்றுக்கொள்பவர் எல்லோரும், பிறரைக் கோபிக்கமாட்டார்கள்; இம்சை செய்யவோ துன்பஞ் செய்யவோ துணியார்கள்; தொல்லைகள், கொடுமைகளைப்பிற உயிர்களுக்குச் செய்யமாட்டார்கள். சமய உண்மைகளை அறிவதுடன், சாதனைகளிலும் காட்டவேண்டும், என்பதே சைவத்தின் நிலைப்பாடு. சாதனையில்லாத போதனையால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. உண்மையென்று உணர்ந்தவற்றை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகும் போதே நல்ல சமயி ஆகின்றோம்.

வேதம், ஆகமம், திருமந்திரம், திருக்குறள், தேவாரத் திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் சாத்திர நூல்கள் என்பன சைவசமயத்தின் புனித நூல்கள். இந்த உலகம் முழுவதிலும் வியாபித்துள்ள கடவுளைப் புரிந்து கொண்டு, அவரின் திருவடிகளை அடைதற்பொருட்டே நமக்கு இந்த மானிட சரீரம் கிடைத்திருக்கிறது. அவர் அடி சேருதலே மானுடப்பிறவியின் அதிஉயர் குறிக்கோள். அதற்குரிய வழி, தர்மம் ஆகும். இவ்வாறு இப்புனித நூல்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன. இவையாவும் இறைவனின் கருத்துக்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

புறத்திலே எவ்வளவோ வேற்றுமைகள்; ஒவ்வொருவரும் வெவ்வேறு பெயரைத் தாங்கியுள்ளார்கள். ஒருவருடைய குரல் போன்று மற்றவருடைய குரல் இல்லை. இப்படி எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. ஆட்களின் உருவங்கள் பருத்தும், சிறுத்தும், மெலிந்தும், திரண்டும், அழகாயும், அழகின்றியும் இருக்கலாம்; அவர்கள் வெவ்வேறு மொழிகளை பேசுபவர்களாகவோ வெவ்வேறு நிறத்தவராகவோ, நாட்டவராகவோ இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரிலும் நிறைந்திருப்பவர் ஒரே கடவுள் தான். இத்துணை வேற்றுமைகளிலும், மக்களிடையே ஒற்றுமையை உணர்த்திக் கொண்டிருப்பது இந்தக் கடவுள்த் தத்துவமே. ஒரே கடவுள்தான் எல்லோரிலும் இருக்கிறார் என்னும் போது, மக்கள் அனைவரும் ஒரே குலத்தவர் என்பது உறுதியாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறது. ஒரே குலத்திற்குள் ஏற்ற இறக்கங்கள், உயர்வு தாழ்வுகள் இருக்க நியாயமில்லை. திருமூலரும், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றுதான் குறிப்பிடுகிறார். இதைப் புரிந்து கொண்டால், மனித குலத்திற்கு எக்கேடும் ஏற்பட இடமில்லாமல் போய்விடும். சைவநெறி எத்துணை மகத்தானது என்பதற்கு வேறு சான்னே தேவையில்லை.

தர்மத்தை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டுமென்றும்; நன்னடத்தையினின்று வழுவாதிருக்க வேண்டுமென்றும்; பாவச் செயல்களை விலக்கிவிட வேண்டுமென்றும் சைவநெறி வலியுறுத்துகின்றது. இவ்வாறு வாழ்க்கையை நடத்தினால் இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழலாம் என்கிறது சைவநெறி. வாழ்க்கையை நல்லபடி வாழவேண்டுமென்று தான் சைவம் கூறுகிறது. வாழ்க்கையைத் துறக்கவோ, வெறுக்கவோ வேண்டும் என்று அது கூறவில்லை. இம்மை, மறுமை இரண்டிற்குமான இன்பத்திற்கு வழிகாட்டுவது சைவநெறி.

நாம், அன்பும், அறனும், தூய்மையும் நிறைந்த இன்பமான வாழ்க்கை வாழ்ந்து, கடவுளை விளங்கிக்கொண்டு ஒவ்வொரு மனிதனிடமும் மற்றும் ஒவ்வோர் உயிரிலும் அந்தப் பரம்பொருளாகிய கடவுளைக் கண்டு, போற்றி, மதித்து; அப்பரம்பொருளை நோக்கி முன்னேறி, அதனை அடைந்து, மரணமிலாப் பெருவாழ்வு பெறவேண்டும் என்பதே சைவசமயம் எமக்க உணர்த்தும் செய்தியாகும்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்."**

# பசு காக்கும் முறை

பசுக்காத்தலின் பெருமையையும் காவாதொழிதலின் தீமையினையும் பற்றி வேதாகமங்களும் மற்றும் நூல்களும் ஒன்று போலவே தோத்திரிப்பன. அவற்றைப் பின்பற்றி ஒழுகி வந்தது நமது புண்ணிய பூமி. ஆனால் இக்காலத்து அவ்வொழுக்கம் மாறிவிட்டது. பசுக்களைக் காப்பதும் காவாதொழிவதும் நிற்க அவற்றை உண்டிப்பொருட்டாக வதை செய்யாதிருத்தலே போதும். அதுவே பெரும் புண்ணியமாகுமென்று சொல்லும் காலமாக உள்ளது.

இக்காலக் கொடுமை அந்தோ! பசுவின் குருதி ஒருதுளி நிலத்தில் வீழ்வதாயின் அதனின்றும் பலகோடி அசுரர்கள் வந்து உதித்து உலகை நாசம் செய்வர் என்று நூல்கள் கூறுகின்றன. நாடோறும் மிருக மனித வயிற்றை நிரப்பும் பொருட்டு வதைக்கப்படும் பசுக்களின் இரத்தம் ஆறாகப்பெருகுமாயின் இந்நாடு என்ன அலங்கோலம் தான் படாது? இக்கொடிய பாவம் நமது புண்ணிய நாட்டில் வரத்தொடங்கிவிட்டது என்பது அறிவோர் துணிபாகும். பசுக்களிடம் கருணை இல்லாதவர்களும் பசுக்கொலை புரிவோரும் பசு இறைச்சி உண்போரும் ஆகிய பிறமதத்தினர், கொலைஞர், புலையர் முதலியோரிடம் பசுக்களையேனும் கன்றுகளையேனும் விற்பது பெரும் பாதகம் ஆகும்.

விலைக்குப் பெற்றவன் செய்யும் பாதகத்துக்கு விற்றவனும் பொறுப்பாளி யாவான் என்பது நூற்றுணிபும் உண்மையமாகும். நோய்ப்பசு, மூப்புடையபசு, இளைத்தபசு முதலியவற்றை விற்பதும், அதனால் வரும் சிறு ஊதியத்தைப் பொருளாக எண்ணுவதும் பாவம் ஆகும். அவற்றையும் பால்வற்றிய பசுக்களையும் உடையவர்கள் தாமே வைத்துக்காப்பாற்றுதல் கடமையாகும். தம்மால் இயலாத போது காக்கக்கூடியவர்களிடம் ஒப்புவித்தலே முறையாகும். மக்கள் இவற்றை அறிந்து திருந்த முயல்வார்களானால் நாட்டுக்கு நலமும் தமக்கு நன்மையும் தேடிக்கொண்டவராவர். **சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார்.**

**நன்றி: சண்டேஸ்வரர் புராண விளக்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண சிறுவர் அமுதம்

- மாதுமை

## 64. வேலாயுதம் என் செய்யும்

"முருகனுடன் போர் செய்வேன்" என்று இறுதியாகச் சூரபன்மன் முடிவுசெய்தான். எனினும் வேலாயுதனின் விசுவரூப தரிசனம் சூரனுக்கு மட்டில்லா மகிழ்ச்சியைத் தந்தது. நான் தேவர்களைச் சிறை வைத்தது மாபெருந்தவறு என்று எல்லோரும் கூறிவருகின்றனர். அவர்களது பேச்சைத் தான் கேட்டுச் சிறை மீட்டிருந்தால் எப்படி முருகன் தரிசனம் காண முடியும். எல்லாம் நன்மையேயாகும் என நினைத்தான் சூரபன்மன். சூரபன்மன் அமரர்களுக்குச் செய்த தீங்குதான் இப்பொழுது முருகப் பெருமானின் விசுவரூப தரிசனம் காணமுடிந்தது. இதனால் நான் முருகனுடன் போர் செய்வதால் பெரும்புகழை ஈட்டுவேனெனச் சூரன் நினைத்தான்.

சூரபன்மன் முந்திய பிறவியில் முருகப்பெருமானுக்குச் சேவலும் மயிலுமாக வேண்டுமெனத் தவமிருந்தவன். இப்பொழுது போர் செய்யாது முருகப்பெருமானின் விசுவரூபத்தை வணங்கினால் போர் நிறுத்தப்படும். ஆனால் சேவற்கொடியும் மயில் வாகனமும் ஆகல் நின்றிடுமல்லவா? எனவே சூரன் மீண்டும் போர் தொடங்க நினைத்தான் போலும்.

சூரபன்மனின் ஞானம் நீங்கியது. ஆணவம் தலைக்கேறியது. போர் செய்வதில் ஊக்கம் கொண்டான். என் வலிமை அசையாதது. முருகன் மாயம் செய்து என்னை ஏமாற்ற நினைத்தான் நான் ஏமாறவில்லை எனக்கொக்கரித்துச் சிரித்தான். நான் முருகனின் விசுவரூப தரிசனம் கண்டு மயங்கவில்லை அமரர்களை வென்றநான் இவனுடைய மாயத்தை அழித்தால் எனக்கு யாரும் நிகராக இருப்பார்களா இந்தப் பாலகனைக் கொல்வேன். தேவர்களைக் கொன்று குவிப்பேன் என்று போர் செய்ய ஆயத்தமானான்.

சூரபன்மன் ஒருமாய மந்திரம் ஜெபித்தான். மண்ணும் விண்ணும் பெரியதோர் இருள்திரையால் மறைத்தான். பிரமாண்டமான கரிய இருளைக் கண்டு சூரியனும் சந்திரனும் அஞ்சினார்கள். அவன் பல தலைகளும் அளவற்ற கரங்களும் கொண்டான். தேவர்களைக் கொல்லப் பாய்ந்தான். தேவர்கள் அழுது அரற்றினார்கள் அலறினார்கள்.

"நுண்ணியர்க்கு நுண்ணியாய் ஓலம்! ஞானநாயகனே ஓலம்
பண்ணவர்க் கிறைவ ஓலம்! பரஞ்சுடர் முதலே ஓலம்
எண்ணுதற் கரியாய் ஓலம்! யாவையும் படைத்தாய் ஓலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே! ஓலம் ஓலம்"

தேவர்கள் தேவே ஓலம்! சிறந்த சிற்பரனே ஓலம்!
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்!
பாவலர்க் கெளியாய் ஓலம்! பன்னிரு புயத்தாய் ஓலம்!
மூவரும் ஆகிநின்ற! மூர்த்தியே ஓலம் ஓலம்!

முருகப்பெருமான் அமரர்களின் முறையீட்டைக் கேட்டார். சூரபன்மனின் மாயையின் கொடுமையைக் கண்டார். சூரபன்மனின் ஆணவத்தை அழிக்கும் சந்தர்ப்பம் இதுவேயென நினைத்தார். தம்முடைய திருக்கரத்திலிருந்த வேலாயுதத்தை நோக்கி; "இப்பொழுதே சென்று சூரபன்மனின் மார்பைப் பிளந்து விட்டு வா" வென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகப்பெருமான் ஏவிய வேற்படை ஆயிரம் கோடிச் சூரியப்பிரகாசமாக ஒளிபரப்பி அக்கினிச் சுவாலையைப் பெருக்கி சூரபன்மனின் இருள் வடிவத்தை அழித்தது. வேற்படை அவனை நோக்கிச் சென்றது. சூரபன்மன் "எப்போதும் அழியாத மேன்மையடைய என்னை பாலகன் ஏவிய வேல் என்ன செய்யும்" என்று ஆணவம் கொண்டான். பின்னர் ஏளனமாகச் சிரித்தான். கோபித்தான். நிலவுலகம், திக்குகள், மேல் கீழ் உலகம் அழிப்பேனென்று ஆரவாரித்தான். உடனே அவன் கடலின் நடுவே சென்றான். அக்கினிபோன்ற தளிர்கள், புகை போன்ற இலைகள் மரகதம் போன்ற காய்களையும், மாணிக்மணி போன்ற பழங்களையும் முகில்கள் போன்ற கிளைகளையும் ஈன்று மண்ணும் விண்ணும் நிழலைப் பரப்பி நின்றான். மாமேருபோல் கிளைகளை அசைத்து நிலவுலகங்களை இடித்தான். தேவர்கள் அஞ்சி மேருமலைக்கு ஓடினார்கள். முருகப்பெருமானின் வேற்படை சர்வசங்காரம் மூர்த்தி போலவும் ஆதி அந்தமும் இல்லாத தீப்பிழம்பை வீசியது. சூரபன்மனாகிய அக்கொடிய மாமரத்தைச் சங்கரித்து எரித்தது. சூர விருட்சம் எரிந்தது. சூரன் அழியவில்லை. மீண்டு பழைய சூரனாய் வந்தான். நான் இவ்வேலையும் வேலை ஏவியவனையும் வெல்வேனென்று வாளையுருவினான்.

## 65. மயிலும் சேவலும்

பல்லிக்குப் பயந்த ஈ பல இடமும் பறந்து பறந்து செல்லும் பின்பு தானே பல்லியின் வாயில் போயிருந்து அதற்கு இரையாவது போல, சூரபன்மனும் ஆகிவிட்டான். ஆறுமுகப்பெருமானை நேருக்கு நேராக நெருங்கி அழிவைத் தேடிக்கொண்டான்.

முருகப்பெருமான் ஏவிய சக்தி வேற்படை சூரபன்மனின் மார்பைப் பிளந்தது. உடம்பை இருதுண்டாக்கியது. கடலில் எறிந்தது. தேவர்கள் பூமழை சொரிந்தனர். வேதங்கள் வாழ்த்தின. வேற்படை புனித கங்கையில் மூழ்கிப் புனிதம் பெற்று மீண்டும் முருகப்பெருமானிடம் வந்தது.

மார்பு பிளந்து உடல் இரண்டு துண்டான பின்னரும், சூரன் சாகவில்லை. மயிலும் சேவலுமாகினான். மீண்டும் சூரபன்மன் ஆணவத்துடன் மாணிக்கமலையொன்று சிறகு விரித்து வருவதுபோல ஆறுமுகன் கடவுளுடன் போர் செய்ய வந்தான்.

சூரபன்மனின் ஒருபாதி நான் என்கின்ற ஆகங்காரம் மற்றப்பாதி எனது என்கின்ற மமகாரம் இவ்விரு பாதிகளும் மயிலும் சேவலுமாகிய சூரபன்மன் முருகவேளை எதிர்த்து வருவதைக் கண்ட அமரர்கள் அஞ்சினர். முருகப்பெருமான் சூரபன்மனாகிய மயிலிலும் சேவலிலும் கிருபாநோக்கம் செய்தார். ஞானிகளின் பார்வையால் இரும்பு பொன்னாவது போல, முருகப்பெருமான் அருட்பார்வையால் சூரபன்மனின் பகைமை ஒழிந்து ஞானம் உதயமானது. அப்பொழுது கந்தவேள் இந்திரனாகிய மயில்வாகனத்தை விட்டுச் சூரனாகிய மயில் வாகனத்தில் ஏறிக்கொண்டார். ஞானம் பெற்ற சேவற்கோழியை நோக்கி "எனது தேரில் கொடியாக இருந்து கூவுவாயென" அருளினார். சூரனாகிய மயிலின் மீது ஏறிய கந்தவேள் உலகெங்கும் சுற்றி வந்தார். எதிரியாக இருந்த சூரன் இன்று மயூரமாகி முருகனைத் தாங்கினான். குக்குடமாகி அவனது வெற்றிக் கொடியாகத் திகழ்ந்ததும் சுவாமியின் பேரருளாகும். சூரனுக்கு இப்பதவி கிடைத்ததால், யாருடைய துயர் தீரும் பொருட்டு ஐயன் அவதரித்தானோ அந்த இந்திரனை வாகனப் பதவியிலிருந்து நீக்கினான். முன்பு மயிலாக இருந்த இந்திரனையும் சேவலாக இருந்த அக்கினி தேவனையும் பழைய வடிவம் தாங்கும்படி முருகப்பெருமான் பணித்தார்.

சரீரத்தில் சிறைபட்டிருக்கும் ஆன்மாவாகிய கொடிக்கு இறைவனுடைய திருவடித் தாமரையே கொழுகொம்பாகும். இறைவனடி சேர்ந்தார்க்கே துன்பம் நீங்கி இன்பம் உண்டாகும். நாம் இறவாமலும் பிறவாமலும் இருக்க வேண்டுமெனில், இறைவனிடம் பிறவாவரம் வேண்ட வேண்டும்.

உயிர்களுக்கு உறுதுணையாக இருப்பவன் கந்தன். ஆன்மா பற்றும் கொழுகொம்பும் அவனே. ஆன்மாவைக் கட்டிவைக்க வேண்டிய "கந்து" அவன் என்பதாலேயே கந்தன் எனப்படுகின்றான். அவனது திருவடி சேர்ந்தாரே பிறவிப் பெருங்கடல் நீந்துவர். இறைவனடி சேர்ந்தவர்க்கு யாண்டும் வறுமை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# மக்களை மதித்த மாறன்

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து!
இன்று நீதிதவறாத பாண்டிய அரசன் ஒருவரின் கதையைச் சொல்லப்போகிறேன் கேளுங்களேன்......

தமிழகத்திலே மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு அரசுசெய்தவர்கள் பாண்டிய அரசர். ஒரு காலத்தில் மாறன் என்ற பாண்டிய ராஜா ஆட்சி செய்து கொண்டிருந்தான். நீதியும், நேர்மையும், நற்பண்பும், நல்லறமும் கொண்டவன் இந்த மாறன். தன் நாட்டுமக்களைத் தன் பிள்ளைகளைப்போல மிகுந்த கவனத்துடன் காத்து வந்தான். இரவு நேரங்களில் கூட மாறுவேடம் போட்டுக்கொண்டு நகரத்திலும், கிராமங்களிலும் திரிந்து மக்களின் கருத்தை அறிவதில் ஈடுபாடு உள்ளவன்.

ஒருநாள் மதுரையின் புறநகர்ப்பகுதியில் இரவுவேளையில் மாறுவேடத்தில் நடந்து கொண்டிருந்தான் மாறன். ஒரு வீட்டில் ஏதோ இருவர் வாக்குவாதப்படும் சலசலப்புக்கேட்டது. சற்று அந்த வீட்டின் கிட்டே போய் நின்று காதுகொடுத்துக் கேட்டான்.

அந்த வீட்டுக் காரனான கீரந்தை என்பவர் தம் மனைவிக்கு கூறுகிறார்.

'அம்மா! நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் ஒரு சில நாளில் திரும்பி வந்துவிடுவேன். அதுவரை நீ உன் பாட்டில் வீட்டுக்கடமைகளைச் செய்து கொண்டு இரு"

மனைவி கூறினாள் 'நீங்கள் சொல்லுவதுபோல எனக்கு மனத்துணிவு இல்லை. தனியாக நானொருத்தி இந்த வீட்டில் நீங்கள் இல்லாமல் தனியே இருக்கப் பயமா உள்ளது...."

அந்த மனிதர் சிரித்தார்; "என்ன பயம்! நம் ராஜபாண்டியர் உன்னை மிக நன்றாகக் காப்பாற்றுவார். அவருடைய ஆட்சியில் ஒரு ஈ எறும்பிற்குக் கூட சிறு தீங்கும் ஏற்படாது. நீ ஏன் பயப்படவேண்டும்? ஒரு பயமும் இல்லை. நான் நாளைக் காலை புறப்பட்டுப் போய், மிக முக்கியமான காரியங்களைப் பார்த்துக்கொண்டு சிலநாளில் திரும்பி விடுவேன். உன் கவலையை விடு. நம் அரசரின் நீதிவழுவா ஆட்சியில் நமக்கு ஒரு தீங்கும் வராது."

இப்படி அந்த வீட்டிற்குள் கீரகந்தையும் மனைவியும் பேசிக்கொள்வதை அரசன் கேட்டுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான் அதன்பின் அவ்வழியால் இரவு நேரத்தில் அந்த வீட்டைக் கவனமாக நோட்டம் விட்டுச் செல்வது வழக்கமாயிற்று.

சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் இரவு அரசன் ஒரு வணிகனைப்போல வேடம்போட்டுக் கொண்டு அந்த வழியால் வருகிறான். அந்த வீட்டில் ஒரு ஆண்மகன் பேசும் குரல் கேட்டது. உரத்துச் சிரித்துக்கேட்ட அந்தக் குரலைக் கேட்டதும் படபடவென்று தட்டிவிட்டான். உடனே வீட்டுக்குள்ளிருந்து "யாரடா அது?" என்ற கம்பீரமான குரல் கேட்டது. அது அவ்வீட்டு உரிமையாளனாகிய கீரகந்தையின் குரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் திடுக்கிட்டான். தான் அவசரப்பட்டு கதவைத்தட்டியது தவறு என உணர்ந்தான். தன்னை வெளிக்காட்டவும் அவன் விரும்பவில்லை. உடனே அவன் அங்கிருந்து ஓடத் தொடங்கினான். விவேகம் மிக்க அரசன் கீரகந்தைக்குத் தன் மனைவி மீது சந்தேகம் ஏற்பட்டு விடக்கூடாதே என்ற எண்ணத்துடன் அருகில் இருந்த வீடுகளின் கதவுகளிலும் வரிசையாகப் படபடவெனத் தட்டியபடி மாற்று வீதிகளில் நுழைந்து விரைந்து அரண்மனைக்குப் போய்விட்டான்.

அடுத்த நாள் காலை; கீரகந்தையும், அண்டை அயல் வீதி வீட்டுக்காரர் பலரும் அரசனின் சபைக்கு வந்து விட்டனர். தமக்கு நீதி வழங்கும்படி அவர்கள் ஒரு வழக்கு கொண்டு வந்திருந்தனர்.

அரசன் தனது விசாரணை மண்டபத்தில் அவர்களை அழைத்த விசாரித்தான். என்ன நடந்தது என "அரசே! நீதிதவறாத செங்கோல் ஆட்சி செய்யும் உங்கள் ஆட்சியில் கடந்த இரவு எங்களுக்கு ஒரு குழப்பம் ஏற்பட்டு விட்டது. நள்ளிரவில் யாரோ ஒரு போக்கிரித்திருடன் எங்கள் வீட்டுக் கதவுகளை வரிசையாகத் தட்டிவிட்டு ஓடிவிட்டான். இப்படியான தவறு தங்கள் ஆட்சியில் நடக்கலாமா?" என வந்திருந்த எல்லாரும் ஒரே மாதிரிக் கூறிக் கவலைப்பட்டார்கள். நள்ளிரவில் தங்களைப் பயமுறுத்திய அந்தக் கயவனைப்பிடித்துத் தண்டிக்க வேண்டும் என்றும் வேண்டினார்கள். அரசன் சிறிது யோசித்தான் என்ன செய்து இவர்களுக்கு ஆறுதல் கொடுக்கலாம்? என்று பின் கேட்டான்.

"எனது அன்பான மக்களே! உங்களுக்க ஏற்பட்ட மனநெருக்கீட்டிற்குகாக நான் மன்னிப்புக் கேட்கிறேன். அந்தத் தவறுசெய்த மனிதனுக்க என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள்?" என்று கேட்டான்.

"அரசே! அந்தப் பாவியைப் பிடித்து, எங்கள் வீட்டுக் கதவுகளில் அநாவசயமாக நள்ளிரவில் தட்டி எங்களைப் பயமுறுத்திய அவனது வலக்கையை மணிக்கட்டுடன் வெட்டிவிடவேண்டும்!" என்றார்கள் அவர்கள் உடனே என்ன நடந்திருக்கும் என யோசிக்கிறீர்களா? அந்த ராஜா ஒன்றுமே யோசிக்கவில்லை

தனது உடைவாளை இடக்கரத்தால் உருவி எடுத்தான் தனது வலக்கையை மணிக்கட்டோடு ஒரே வெட்டாக வெட்டி விட்டான். மக்கள் கதறினர். மந்திரிப் பிரதானிகள் அதிர்ச்சியினால் ஆ!வென்று கத்தினார்கள். இரத்தம் பீறிடும் வலக்கையை பட்டுத் துணியினால் போர்த்திக் கட்டினர் மெய்ப்பாதுகாலவர் அரசன் அயர்ச்சியுடன் சிம்மாசனத்தில் சரிந்து அமர்ந்தான்.

அந்த இரவு...... கீரந்தை வெளியூர் சென்ற இரவு மாறுவேடத்தில் இருந்த நான் கேட்டவற்றை அதன் பின் தினசரி அவ்வழியால் போகும் போதெல்லாம் அந்த வீட்டைக் கவனித்ததை, சம்பவம் நடந்த அந்த இரவு வீட்டினுள் கேட்ட கீரகந்தையின் குரலை விளங்கிக் கொள்ளாமல் கதவைத் தட்டிவிட்ட தான் அவசரச் செயலை கீரகந்தை சந்தேகப்படக்கூடாதே என்பதால் பல வீட்டுக் கதவுகளைத் தட்டிவிட்டு ஓடியதை விபரித்தான். மக்களிடம் மன்னிப்புக் கோரினான். இரவும் பகலும் தம்மையும் நாட்டையும் சிரத்தையுடன் காக்கும் தம் அரசன் நீதியை நிலைநாட்ட மக்கள் குரலை மதித்து தன் கையைத் துண்டித்துக் கொண்டதை எண்ணி எண்ணி விம்மினர். அந்த நாட்டு மக்கள் வெட்டுண்ட கைக்குச் செயற்கைக் கை பொருத்திக் கொண்டு ஆண்ட அந்த அரசன் பொற்கைப் பாண்டியன் என்று புகழ்ப்பெயர் பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் சிவபுராணம்

**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P. அவர்கள்**

**"நானேயோ தவஞ்செய்தேன்**
**சிவாயநம எனப்பெற்றேன்**
**தேனாய்இன் னமுதமுமாய்த்**
**தித்திக்கும் சிவபெருமான்**
**தானேவந் தெனதுள்ளம்**
**புகுந்தடியேற் கருள்செய்தான்**
**ஊனாரும் உயிர்வாழ்க்கை**
**ஒறுத்தன்றே வெறுத்திடவே"**

பிறவிப்பிணி தீர்க்கும் பெருவாசக மாகிய திருவாசகத்தைச் சைவ உலகுக்கு அளித்தவர் மணிவாசகர். அவருடைய தூய இருதய கமலத்திலே இருந்து வெளிப்பட்ட செஞ்சொற்களாகிய மணி களை அன்பாகிய கயிற்றிற் கோத்து இறைவனுக்கு அழுதழுது சாத்தி அதன் பொருள் அவனே என்ற காட்டி அவனடிக்கீழ் நீங்காப் பேரின்பம் பெற்றவர் அவர். தேனாய் அவருக்கு இனித்தான் இறைவன். அந்த இன்ப உயிர்ப்பை வாய்மடுத்த அடிகளின் பாடல்கள், அவற்றை ஓதுகின்ற ஒவ்வொருவருக்கும் தேனாய் இனித்தன. அத்தகைய சுவைமிக்க திருவாசகப் பாடல்களை ஐம்பத்தாறு பதிகங்களாய் அமைத்துள்ளனர். அவற்றுள் முதலாவது பதிகம் சிவபுராணம் என்பது. திருவாசகம் அறிவிக்கும் நெறி இரண்டு. முதலாவது நாதன் நாமம் போற்றுதல். இரண்டாவது நாதன் தாள் போற்றுதல். இவற்றைக் கொண்டே சிவபுராணம் தொடங்குகிறது.

**சிவபுராணம்:**

சிவபுராணம் என்றால் சிவனது அநாதி முறைமையான பழைமை என்பது பொருளாகும். இறைவன் பழையதிற் பழையவன்; புதியதிற் புதியவன். இதனை அடிகளே திருவெம்பாவையில்,

**"முன்னைப் பழம்பொருட்கும்**
**முன்னைப் பழம்பொருளே"** என்றும்

**"பின்னைப் புதுமைக்கும்**
**பெயர்த்தும் அப்பெற்றியனே"** என்றும்

அருளியுள்ளார். திருவாசகம் குருவருள் விளக்கத்தைச் சிறப்பாக எடுத்துக் காட்டுவ தாகும். பக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு இறைவன் குருவடிவில் வந்து ஆட்கொள் வான் என்பது சைவசித்தாந்தம். திருவாச கத்தின் முழுப்பொருளும் திருவைந் தெழுத்து விளக்கமேயாகும். திருவாசகம் திருவைந்தெழுத்தைக் கொண்டு தொடங் கித் திருவைந்தெழுத்தின் அடக்கமான ஓங்காரத்தைக் கொண்டு முடிகிறது. ஓங்காரத்து உட்பொருளை "ஐயன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே" என்று முடிவிலேயமைந்த அச்சோப் பதிகத்தில் பாடியுள்ளார்.

**திருவைந்தெழுத்து:**

'நமசிவாய வாழ்க' என்று தொடங் குகின்ற தொடக்கம் எல்லாப் பொருளையும் அவனடிக்கீழ் அடக்குகின்ற அடக்கமாக அமைந்துள்ளது. ஏனென்றால் இவற்றுக் குள் அடங்காதது எதுவுமிருக்க முடியாது. அண்டங்கள், அறியாமை, சிவபரம்பொருள், திருவருள், உயிர்கள் என்பனவற்றை முறையே 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத் தும் விளக்குகிறது. திருவாசகத்தின் முழுப் பொருளும், திருவைந்தெழுத்தின் விளக்க மும் திருவடிப்பேறு ஆகும். இதனையே முதலடிகளில் 'நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க' என்பதால் விளக்கு கிறார்.

**பாயிர மரபு:**

ஒரு நூலின் தொடக்கத்தில் வாழ்த்து, வணக்கம், அவையடக்கம், நூற்பெயர், நூற்பயன் என்பன கூறுவது மரபு. மணிவாசகப் பெருமான் இதனைச் சிவபுராணத்திலே விளக்கிப் பாடியுள்ளார். இதனைத் திருவாசகத்துக்கு ஒரு முன்னுரை என்று கூறினால் அது மிகையாகாது. முதலிலே வாழ்த்துக்கள் கூறித் தொடங்கு வதைக் கவனிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானாசிரியர்கள் அறுவகை வாழ்த்துக்கூறி ஆன்மகோடிகளை உய்விக்க விரும்பினார்கள்.

'வாழ்க அந்தணர்' என்று தொடங்கிப் பாடி வைகையிலே ஏட்டினை இட்ட ஞானசம்பந்தரும், 'வான்முகில் வழாது பெய்க' என்று பாடி வாழ்த்திய கச்சியப்பரும், 'நமச்சிவாய வாழ்க' என்று வாழ்த்திய மணிவாசகரும் ஞானப்பெருமக்களே. 'நமச்சிவாய வாழ்க' என்று பஞ்சாட்சரத்தை வாழ்த்தி 'நாதன்றாள் வாழ்க' என்று உருவத் திருமேனியை வாழ்த்தி, 'இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க' என்று அருவத் திருமேனியை வாழ்த்தி, 'கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க' என்று குருவடிவை வாழ்த்தி, 'ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க' என்று சாத்திரங்களை வாழ்த்தி, 'ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க' என்று 'ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்கும் பெருமானை வாழ்த்தி,

**"நமச்சிவாய வாஅழ்க**
**நாதன்றாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்னெஞ்சில்**
**நீங்காதான் றாள்வாழ்க**
**கோகழி யாண்ட**
**குருமணிதன் றாள்வாழ்க**
**ஆகம மாகிநின்**
**றண்ணிப்பான் றாள்வாழ்க**
**ஏக னனேக**
**னிறைவ னடிவாழ்க"**

என அறுவகை வாழ்த்துக் கூறுகிறார். அடுத்து ஐந்துவகை வெற்றி கூறுகிறார்.

**வெற்றி:**

புறத்திலே நாம் காணுகின்ற வெற்றியிலும் பார்க்க அகத்திலே வெற்றியைக் காண முயலவேண்டும். ஐம்புலன்களை அடக்கி வெற்றி கொள்வதுதான் சமய வாழ்வு வாழ்வார்க்கு வேண்டியவை. அப்பரடிகள் அகத்திலே வெற்றி கண்ட அருளாளர். அவர்,

**"புள்ளுவர் ஐவர் கள்வர்**
**புனத்திடைப் புகுந்து நின்று**
**துள்ளுவர் சூறை கொள்வர்**
**தூநெறி விளைய வொட்டார்"**

என்று பாடி ஐம்புலன்கள் செய்யும் தீங்குகளை எடுத்துக் காட்டி அவற்றை வெற்றி பெற வேண்டுமானால்,

**"முக்கண்ணான் பாத நீழல்**
**உள்ளிடைப் புகுந்து நின்று**
**அங்கு உணர்வினால் எய்யலாமே"**

என வெற்றிபெறும் மார்க்கத்தையும் விளக்குகின்றார். ஐவகை வெற்றி முக்கியம் என்பதை அடிகளும் சிவபுராணத்திலே,

**"வேகங் கெடுத்தாண்ட**
**வேந்தனடி வெல்க**
**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன்**
**பெய்கழல்கள் வெல்க**
**புறத்தார்க்குச் சேயோன்றன்**
**பூங்கழல்கள் வெல்க**
**கரங்குவிவார் உள்மகிழுங்**
**கோன்கழல்கள் வெல்க**
**சிரங்குவிவார் ஓங்குவிக்கும்**
**சீரோன் கழல்வெல்க"**

எனக் காட்டுகின்றார். உலகியலுக்குள் இன்பம் துய்க்க நாடும் அந்த ஊட்டத்தை அடக்கித் திசைதிருப்பி ஆட்கொண்ட தன்மையை அடுத்த அடியாலும், அடியவர்கள் அல்லாதார்க்குப் பாலில் வெண்ணெய் போல மறைந்திருக்கும் தன்மையை அடுத்த அடிகளாலும் விளக்கி அருளுகின்றார். இந்த ஐந்து வெற்றிகளும் புன்னெறி யதனிற் செல்லும் போக்கை விலக்கி நன்னெறியைக் காட்டுவதாகும்.

**போற்றி:**

அறுபகை செற்று ஐம்புலனை அடக்கி வழிபடுவார்க்கு உதவுவனவாகிய போற்றிகளை எட்டுவகையாகக் காட்டு கின்றார். அட்டவீரட்டம் புரிந்த பெருமானுக்கு எட்டு நாண்மலர் கொண்டு வழி படுவது இயல்பு. அவை எட்டும் போற்றி களாக வெளிவருகின்றன. எண் குணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானை எட்டுமுறை போற்றிசெய்து துதிக்கின்றார். 'ஈசனடி போற்றி' என்பது தொடக்கம் இவை அமைந்துள்ளன.

**"ஈசனடி போற்றி**
**எந்தை யடிபோற்றி**
**தேசனடி போற்றி**
**சிவன்சே வடிபோற்றி**
**நேயத்தே நின்ற**
**நிமல னடிபோற்றி**
**மாயப் பிறப்பறுக்கும்**
**மன்ன னடிபோற்றி**
**சீரார் பெருந்துறைநந்**
**தேவ னடிபோற்றி**
**ஆராத இன்பம்**
**அருளுமலை போற்றி"**

**குருதரிசனம்:**

வாழ்த்தும் வெற்றியும் போற்றியும் கூறிய அடிகள், இறைவன் குருவாக வந்து தன்னை ஆட்கொண்ட திறனை நினைந்து போற்றுகின்றார். 'சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனால்' என்பதால் இறைவன் சகலர்க்கும் பக்குவமுடைமை கண்டு குருவடிவாக வந்து அருள்புரியும் திறத்தால் தனக்கும் அப்பேறு கிடைத்ததெனக் காட்டி சிவனென்பதால் இறைவனைக் குறித்தும், அவன் என்பதால் குரு மூர்த்தியைக் குறித்தும் பாடியருளினார். நூற்பயனையும், அவையடக்கத்தையும் அடுத்துக் காணலாம். 'சிவபுராணந்தன்னை' என்பது நூற்பெயராகும். 'முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்' என்பது நூற்பயனாகும். 'பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்' என்பதும், 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' உரைப்பேன் என்பதும் அவையடக்கமாகும்.

திருவாசகத்தின் முகவுரை போன்று பிறவியின் இழிவையும், இறைவனின் பெருமையையும், அடியவர்க்கு அருள் புரியும் திறனையும், அடியார்கள் இறைவனை வேண்டி நிற்கும் திறனையும் காட்டிச் சிவபுராணத்தை முடிக்கின்றார். வினையின் காரணமாகப் பிறந்து உழலுகின்ற உயிரானது கொடிய இருளாகிய ஆணவத்தினாலும் அறம்பாவம் என்னும் இருவினைக் கயிற்றினாலும் கட்டப்பட்டு புறத்தே தோலால் போர்த்து, அகத்தே புழு முதலிய அழுக்குகளைச் சொரியும் ஒன்பது வாயில் கொண்ட குடிலாக அமைந்த உடம்பினை எடுக்கிறது. மானுடப் பிறவி எடுத்த பின்பும் நேரிய வழியிற் செல்லவிடாது தடுத்து விலக்கி விடுகின்றன மலங்கள். இதனால் அறியாமையில் உழன்று நிற்கும் உயிர் ஏதோ தவப்பயனாலும், முன்பிறவிகளில் ஈட்டிய நல்வினை வசத்தாலும் இறைவனைக் குருவாகப் பெற்று உய்யும் நெறியை அடைகின்றது. ஆன்மாவின் குறிக்கோள் இறைவன் திருவடியை அடைதலாகும். இதனைச் சிறப்பாக விளக்குகிறார்.

**"எல்லாப் பிறப்பும்**
**பிறந்திளைத்தேன் எம்பெருமான்**
**மெய்யேயுன் பொன்னடிகள்**
**கண்டின்று வீடுற்றேன்"**

**பதி இலக்கணம்:**

பசு, பாசங்களைப் பற்றிக் கூறிய அடிகள் சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கையில் நின்று பதியிலக்கணத்தைக் காட்டுகின்றார்.

**"ஆக்கம் அளவுஇறுதி**
**இல்லாய் அனைத்துலகும்**
**ஆக்குவாய் காப்பாய்**
**அழிப்பாய் அருள்தருவாய்**
**போக்குவாய் என்னைப்**
**புகுவிப்பாய் நின்தொழும்பில்**
**நாற்றத்தின் நேரியாய்**
**சேயாய் நணியானே**
**மாற்ற மனங்கழிய**
**நின்ற மறையோனே"**

என்பதால் இறைவனுடைய சொரூப நிலையும் தடத்தநிலையும் கூறப்படுகிறது. தடத்தில் இறைவன் இறங்கி வருவது அடியவர்களுடைய பிறந்த பிறப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுப்பதற்காகவாம் என்பதை நாமறிய உணர்த்துகிறார்.

**'நிலந்தன்மேல் வந்தருளி**
**நீள்கழல்கள் காட்டி**
**நாயிற் கடையாய்க்**
**கிடந்த அடியேற்குத்**
**தாயிற் சிறந்த**
**தயவான தத்துவனே"**

என்பதைப் பன்முறை நாம் படித்துப் படித்து இன்பம் அடையவேண்டும். இறைவன் தாய்க்கருணையுடையவன்; தாயினும் நல்ல தலைவன்; பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையவன். எங்கள் பிழை பொறுப்பதில் அவன் தாய். எங்கள் பணிகளை ஏற்றுக்கொள்வதில் அவன் தாய். அருள் செறிவதில் ஈடிணையற்ற எமது அன்னையாக நின்று கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல எமக்கு இரங்குகின்றான் இறைவன்.

இத்தன்மையில் தயவு காட்டும் இறைவனிடம் அடிகள் கேட்கும் வரங் களைக் கவனிப்போம்.

**வேண்டும் பரிசு:**

**"வேற்று விகார**
**விடக்குடம்பின் உட்கிடப்ப**
**ஆற்றேன் எம் ஐயா"**

என்பது அவ்வரமாகும். அடிகள் மாத்திர மல்ல ஆண்டவன் நெறியைப்பற்றி நிற்கும் நாம் ஒவ்வொருவரும் கேட்கும் வரம் இதுவே. 'அரனே அரனே' என்று அரற்றி யரற்றிக் கேட்கவேண்டும். எந்த நிலையில் நின்று கேட்கவேண்டுமென்றால் பொய் கெட்டு மெய்யான நிலையில் நின்று கேட்க வேண்டும். அப்படிக் கேட்போமானால் எம்பெருமான் எமக்கு மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராத நெறியைத் தந்தருளு வான். இதனால் கள்ளப் புலக்குரம்பைக் கட்டறுத்து விடும், "வீடு பேறு" என்ற பெருநிலை வாய்த்துவிடுமென ஆன்மாவின் குறிக்கோளில் நிறுத்துகிறார்.

**பாட்டின் பயன்:**

இறுதியாக இத்தகைய பாட்டினைப் பாடி இறைவனை வணங்குபவர்க்குக் கிடைக்கும் பெரும்பயன் விளக்கப்படுகிறது.

**"சொல்லிய பாட்டின்**
**பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தின்**
**உள்ளார் சிவனடிக்கீழ்**
**பல்லோரு மேத்தப் பணிந்து"**

பொருளுணர்ந்து சொல்லுவார் எழுவாயா கவும், செல்வர் சிவபுரத்தினுள்ளார் பயனிலையாகவும் அமைந்துள்ளன. சிவனடியார்களால் போற்றப்படுவது ஒரு பேறு. சிவனடிக்கீழ் சென்றடைவது மற்றைய பேறாகும்.

**"கட்டறுத் தெனையாண்டு கண்ணார நீறு**
**இட்ட அன்பரோடு யாவருங் காணவே**
**பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை**
**எட்டி னோடிரண் டும்அறி யேனையே"**

என்றார் இன்னோரிடத்தில் பாட்டின் பொருளுணர்தல் என்பது மெய்ப்பொருளை அறிதல் என்பதாகும். அந்தப் பொருளே சிவமென்னும் செம்பொருளாகும்.

எனவே திருவாசகத்தின் முழு அடக்கமும் சிவபுராணமே என்பதையும், சைவசித்தாந்த அடிப்படையில் ஆன்மா இறைவனை அடையும் நெறியை இப்பகுதி விளக்கி நிற்கிறது என்பதையும் இதனைப் பொருளுணர்ந்து பாடிப் பரவுவோர் பிறவாத இன்பப் பேரின்ப வீட்டினை அடைவர் என்பதையும் முழுப்பொருளாக அறிய வைப்பது சிவபுராணம். இதனை நாடோறும் காலை மாலை ஓதிப் பயனடைவோமாக.

**"தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தமாக்கியதே-எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்."**

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையான்குடி மாறன்

# நாயனாரும் விருந்தோம்புதலும்

**திரு.நா. நல்லதம்பி அவர்கள்,**
ஓய்வுபெற்ற அதிபர்.

**வி**ருந்தோம்புதலில் நம் தமிழ் மக்கள் காட்டிய, காட்டுகின்ற முன்மாதிரியான செயற்பாடு பற்றித் தமிழ் இலக்கியங்களிலே சிறப்பாகப் பேசியிருக்கிறார்கள்.

இல்வாழ்வான் ஒருவனுடைய முக்கியமான கடமைகளில் ஒன்றாக விருந்தோம்புதலைத் திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

**தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை** (குறள் 43) என்பது அவர் கூற்றாகும். தென்புலத்தாராகிய பிதிரர், தெய்வம், விருந்தினர், சுற்றம் ஆகியவர்களோடு தன்னையும் பேணிக் கொள்ளுதல் இல்வாழ்வானுடைய கடனாகும் என்பது அதன் பொருளாகும்.

இவற்றுள், விருந்தோம்பும் பண்பாடு உயிர்நாடியாக இருக்கவேண்டும் என்று மேலும் கூறியிருக்கிறார்.

**இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு** (குறள் 81)

இன்று, வசதி படைத்தவர்கள் தமது உறவினர் நண்பர்களுக்கு விருந்தளிக்கிறார்கள். பண்டிகைக் காலங்களிலும் தமது இல்லத்தில் நடைபெறும் ஏதாவதொரு வைபவத்தின் போதும் ஒருவர் தமது உற்றார் உறவினர் நண்பர்களை அழைத்த விருந்து செய்வது இன்றைக்கு எல்லோராலும் மேற்கொள்ளப் பெறுவது வழக்கமாகி வருவதைக் காண்கிறோம்.

இந்த விருந்து நிகழ்விலே பதிலுபகார நோக்கமும், பணப்பெருமையும் சேர்ந்து இருப்பதையும் காண்கிறோம். இதிலே, மனத்தின் புனிதத் தன்மையைக் காண இயலாது.

மாறாக, முற்றிலும் புதியவராக, எதிர்பார்ப்பின்றி நமது இல்லத்துக்கு வரும் விருந்தினர், அதுவும் சிவனடியாராக இருப்பவர் என்றால், நாம் அவரை எவ்வாறு பேணுகிறோமோ உபசரிக்கிறோமே என்பதிற்றான் விருந்தோம்புவதில் வள்ளுவர் காட்டும் நுணுக்கமும் சேக்கிழார் குறிப்பிடும் பக்தியும் கலந்துள்ளது என்பதை நாம் உணரலாம். அங்கே தான்,

**மோப்பக்குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந் (து) தினரை யுங் காணவேண்டி வரும்!**

எனவே, விருந்தினராக - புதியவராக - வரும் ஒருவருக்குப் பாதபூசை செய்து, ஆசனத்திருத்தி, இன்முகத்தோடு உணவு பரிமாறி வழியனுப்பி வைக்கும் பக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்தையுடன் பேணும் பண்பாடுள்ள நாயன்மார்கள் பலரைப் பற்றிச் சேக்கிழார் பெருமான் தமது புராணத்தில் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

அவர்களில், இளையான்குடி மாறன் நாயனார் என்பவர் விருந்தோம்புதலில் காட்டிய பக்திசிரத்தையைப் பார்ப்போம்.

செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்திருக்கும் மாறன் நாயனாருடைய இல்லத்தில் ஒரு நாள் இரவு;

அன்று, அங்கு யாருமே பசியாற உண்ணமுடியாத நிலையில், பட்டினியோடு படுத்து உறங்கிவிட்டார்கள்.

இந்த இளையான்குடி மாறன் நாயனார், வேளாண்மைத் தொழிலால் பெருஞ்செல்வம் பெற்றவர். சிவனடியாரிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவர். அத்துடன் அவரது இல்லத்துக்கு வரும் சிவனடியார்களுக்கு அறுசுவை உணவு படைத்து உபசரிக்கும் மனப்பக்குவம் உள்ளவராகவும் விளங்கினார்.

இதனால் இறைக்கின்ற கேணி ஊறுவது போல அவருடைய இல்லத்தில் செல்வமும் பெருகியது. ஒரு குபேரனாக, அற வழியிலே பொருள் தேடிப் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாளராக விளங்கினார்.

அவ்விதமாக வாழ்ந்து வரும் காலத்தில் அவருடைய செல்வ நிலையில் தளர்வு ஏற்பட்டது. சிறிது சிறிதாகச் செல்வம் செல்லத் தொடங்கியது.

ஆயினும் அவர் தனது விருந்தோம்புதலைக் கைவிடவில்லை; கடன்பட்டும் செய்து வந்தார்.

அன்று தமது குடும்பத்தவர்களுடைய பசிபோக்கவே வழிதெரியாது பட்டினியாக உறங்கிவிட்டார்கள்.

அன்றிரவு மழையும் பெய்து கொண்டிருந்தது. யாரோ கதவைத்தட்டும் ஓசை கேட்டது; மாறனார் கதவைத் திறந்தார். அங்கே சிவனடியார் ஒருவர் மழையில் நனைந்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

இதனைக் கண்டதும் மாறன்நாயனார் அச்சிவனடியாரை உள்ளே அழைத்து வந்து அவரது ஈரம் போக்கி, மாற்று உடை அணிவித்து ஆசனத்திலிருக்க வைத்தார்.

குளிரினாலும் பசியினாலும் சோர்ந்து போயிருக்கும் அந்தச்சிவனடியாரது பசியைப் போக்க வேண்டுமே. இந்த இராத்திரி வேளையில், ஏற்கனவே உண்ண உணவின்றியிருக்கும் நாம், இந்த அடியாரை இன்று எவ்விதம் விருந்தளித்துப் பேணுவது என்று மாறன் நாயனார் யோசனையில் ஆழ்ந்தார்.

இந்த அகாலவேளையில் அயலவர்கள் எல்லோரும் உறங்கிவிட்டபோது கடன்படவும் இயலாது ஏற்கனவே பலமுறை கடன்பட்டவர்களிடம் மேலும் கடன் கேட்பது நியாயமாகுமா? என்றெல்லாம் நாயனார் தமது மனைவியாருடன் ஆலோசனை பண்ணினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் கடன்பட்டவர்களிடம் திரும்பவும் கடன் கேட்க விரும்பாத அவரது மனைவியார், அன்று பகலில் விதைத்து இரவு பெய்த மழையினால் மிதந்து நீந்திக்கிடக்கும் நெல்லை வாரி எடுப்பது தவிர வேறு வழி தெரியவில்லையெனக் கூறினார்.

அந்த யோசனையைக் கேட்டதும் மிகவும் மகிழ்ச்சியுற்ற இளையான்குடி மாறனார், அந்த நள்ளிரவில் வயலுக்கு ஓடிச்சென்று, நீரில் மிதந்து கிடந்த நெல்மணிகளின் ஒரு தொகையை வாரி அள்ளிக்கொண்டு வந்து தம் மனையாளிடம் கொடுத்தார்.

அந்த நெல்லை வறுத்துக்குற்றி அரிசியாக்கி அன்னம் ஆக்கினார். இலைகளை ஆய்ந்து அறுசுவைக் கறிகளைச் சமைத்தார். சிவனடியாரை அழைத்து விருந்தளித்து உபசரிக்கும் வண்ணம் கணவரிடம் கேட்டுக்கொண்டார் அந்த அம்மையார்.

அந்நேரம் பசிக்களைப்போடு வந்த அந்தச் சிவனடியார் அயர்ந்து தூக்கத்தில் கிடந்தார். எப்படியோ உணவு தயாராகிவிட்ட உள்ளக்களிப்போடு உறக்கத்திலிருந்த சிவனடியாரை அழைத்தார் மாறனார்.

என்ன அதிசயம்! இதுவரை ஆழ்ந்த தூக்கத்தில் கிடந்த அந்தச் சிவனடியாரைக் காணவில்லை! நன்றாகத் தேடிய பொழுது அந்த இடத்தில் ஒரு சோதி எழுந்து தோன்றியது.

சிவனடியாராக வந்தவர், எல்லாம் வல்ல சிவபெருமானே என்று உரோமஞ் சிலிர்ப்ப வணங்கி நின்ற வேளையில் சிவபெருமான் உமைபாகராக இளையான்குடி மாறனார்க்கும் அவரது அன்பு மனையாளுக்கும் காட்சி கொடுத்தருளினார்.

மேலும், "நமது அடியார்களுக்கு வறுமையுற்ற போதும் மனந்தளராது விருந்தோம்பிப் பணிசெய்த அன்பனே, நீயும் நின் அன்பு மனையாளும் எமது பதஞ்சேர்ந்து பேரின்ப வாழ்வு பெறுவீராக!" எனத் திருவாய் மலர்ந்தருளினார் சிவபெருமான்.

**செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத்தவர்க்கு** (குறள்89) என்ற வள்ளுவர் வாய்மொழி இருந்தவாறு, இவ்வுலகில் விருந்தினரை உபசரித்து மகிழ்ந்த இளையான்குடி மாறன் நாயனார், வானவர்களின் விருந்தினராகத் தம் மனைவியாரோடு சென்றடையும் பேறு பெற்றார்.

## மேதினியில் சுகவாழ்வு பெற்றுவாழ வேண்டி நிற்போம்

பிரமனும் திருமாலும் செருக்குக் கொண்டு
பெரியவர் யாரென்று சண்டை யிட்டார்
அரனுமே இவர்களது செருக்க டக்க
அனல்பி ழம்பாய் நடுவே தோன்றி
விரைந்துமே அடிமுடி தேடச் சொன்னார்
வெற்றி பெறவே வேடங் கொண்டு
பரமனது அடிமுடி காணா நின்றார்
பற்றுடனே சிவனார் அருள் புரிந்தார்.

சோதி வடிவாய் சிவனார் தோன்றத்
தொழுதிட் டநாளே சிவராத்திரி யாகும்
ஆதி யந்தம் இல்லாத அம்பலத்தானை
அன்றிரவு முழுவதும் விழித்தி ருந்து
ஓதி வழிபா டுசெய்து உபவாசம் னோற்று
உள்ள மெலாம் அவனை நினைந்து
மேதி னியில் சுகவாழ்வு பெற்று வாழ
வேண்டி நிற்போம் வினைகள் தீர்ப்போம்.

**கவிஞர். வ. யோகானந்தசிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# பிரார்த்தனை உரை

மட்டுவிலைச்சேர்ந்த அமரர் கந்தர் காசிநாதர் அவர்களுக்கு இவ்வுரையைச் சமர்ப்பிப்பதில் திருப்தியடைகிறேன்.

தொண்ணூற்றாறு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து கல்விப்பணி, பொதுப்பணி, ஆகியவற்றைச் செய்து மகிமை பெற்றவர் இவர். மட்டுவிலில் விளங்கும் சந்திர மௌலீச வித்தியாலயத்தின் அறங்காவலராக விளங்கியவர் இவர். அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி தனது சொந்த நிலத்தின் ஒரு பகுதியை அப்பாடசாலைக்கு இலவசமாக வழங்கியவர் இவர். மேலும் வாழ்நாள் முழுவதும் சைவவாழ்வு வாழ்ந்து எமது சமயக் கோட்பாடுகளுக்கு மதிப்புக் கொடுத்தவர் இவர். இவரது வாழ்க்கைத் துணைவியின் தவவாழ்வு மிகவும் பாராட்டுதற்குரியது. அது மட்டுமன்றி சைவ ஒழுக்க நியமங்களில் இம்மியளவும் பிசகாது நெறியான வாழ்வு வாழும் சைவத்திரு சிவபாலன் அவர்களுக்கு தந்தையாக விளங்கிய பெருமையும் இவருக்குண்டு. இவர் பெற்ற ஏனைய பிள்ளைகளின் அறவாழ்வை நான் நன்கு அறிவேன். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் போற்றுதற்குரியவர்கள். இந்த வகையில் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் ஆகியவர்களைக் கண்டு நிறைவாழ்வு வாழ்ந்து அமரத்துவமடைந்துள்ளார். இவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலம் மட்டுவிலுக்கு ஒரு பொற்காலமாகும். மேலும் ஆசிரியரின் நினைவாக மட்டுவிலில் வாழ்ந்த பேரறிஞர்கள், சான்றோர்கள், சந்திரமௌலீச வித்தியாசாலையின் வரலாறு என்பனவற்றின் தொகுப்பு **"காசிநாதர் மான்மியம்"** என்னும் பெயரில் மலர் வெளிவருவது காலத்தின் தேவையாக உள்ளது. எனவே அமரர் காசிநாதர் ஐயாவை வணங்கி அவருடைய ஆத்மாவுக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை. இலங்கை.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P**
தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை நகுலேஸ்வரம்

**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

கீரிமலை இலங்கையின் வடகரையில் உள்ளது. இது தீர்த்த விசேடம் மிக்க இடம். இங்கு புராதன சிவத்தலம் உன்றும் உண்டு. இவ்விடத்தின் புராதன பெயர் திருத்தம்பலை. கோயில் கொண்டிருந்த பெருமானின் புராதன பெயர் திருத்தம்பலேசுவரர். கீரிமுகமுடைய முனிவர் ஒருவர் இத்துறையில் நீராடி, அருகிலுள்ள பெருமானை வழிபட்டு வந்ததினாலே கீரிமுகம் மாறப்பெற்றார். இக்காரணங் கொண்டே இவ்விடம் கீரிமலை எனப்பெயர் பெற்றது. இதனை வடமொழியில் நகுலகிரி என்பர். இங்கு இடங்கொண்ட இறைவனின் இக்காலப் பெயர் நகுலேசர்-நகுலேசுவரர். இறைவி நகுலாம்பிகை-நகுலேசுவரி. கோவில் நகுலேசுவரம்.

இத்தலம் ஆதிச்சோழ மன்னனாகிய முசுகுந்தன், நளன், அருச்சுனன் முதலியோரினால் தொழப்பெற்ற ஒன்றாகும். தீர்த்த-தல யாத்திரைகளுக்குரிய புராதனப் புண்ணிய இடங்களுள் கீரிமலையும் ஒன்று.

வடமொழிச் சைவ புராணங்கள் பத்தினுள் கந்தபுராணம் சிறப்பானது. அதில் உள்ள சூதசங்கிதையில் நகுலேசுவரம் பழைமையான யாத்திரைத் தலங்களுள் ஒன்று எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஈழத்தில் சைவம் எவ்வளவு தொன்மைக் காலம் தொடக்கம் நிலவி வருகின்றது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

விசயன் இலங்கை அரசனாக இருந்தபோது, இவ்வாலயத்திற்குத் திருப்பணிகள் செய்ததாக வரலாறு உண்டு.

முன்னாளில் ஈழத்தின் வடகரை முழுவதும் மலைத் தொடராயிருந்து, பின் கடலால் தாக்குண்டு அழிந்துபோய்விட, எஞ்சியுள்ள அதனடிவாரமே இப்போதுள்ள கீரிமலை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இந்நிலத்தின் கீழேயுள்ள கற்பாறைகளிலே சிப்பிகளும், நத்தைகளும் பதிந்து கல்லாய்க் கிடத்தலாலும், வடகரையிலே கடலினுள் நெடுந்தூரம் கற்பாறைகள் காணப்படுதலாலும், ஆராய்ச்சியாளர் முடிவைச் சரியானதெனத் துணிந்து கொள்ளலாம்.

இவ்வாறு கீரிமலையென்று கூறப்படும் மேட்டு நிலத்தில் சுவறும் மழைநீர், நன்னீருருவியாகிப் பள்ளமாகிய கடற்கரையிற் பலவிடங்களில் சுரந்தோடுகின்றது. இவ்வருவி நீரே கீரிமலைத் தீர்த்தச் சிறப்புக்குரியதாகும். மாருதப்புரவீகவல்லி தீர்த்தமாடித் தனது குன்மநோய் நீங்கப்பெற்ற புண்ணிய தீர்த்தம் இதுவேயாகும்.

பறங்கியர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய பொழுது இடித்தழித்த சிவாலயங்களுள் கீரிமலைச்சிவன் கோவிலும் ஒன்று. அழிந்த இக்கோவிலை உருவாக்குவதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முயற்சி எடுத்துள்ளார். அவரது முயற்சியைத் தொடர்ந்து திருப்பணி வேலைகள் நடந்தேறி, இன்று நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இவ்வாலய மகோற்சவம் மாசி மாதத்தில் பதினைந்து நாட்கள் நடைபெறுகின்றது மாசி மகாசிவராத்திரியில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூவகைச் சிறப்பும் இவ்வாலயத்திற்கு உண்டு.

இவ்வாலயத்தின் தொன்மைபற்றிக் கூறும் நூல்கள்; **தட்சண கைலாய புராணம், கைலாயமாலை, நகுலாசல புராணம், நகுலமலைக்குறவஞ்சி, நகுலமலைச்சதகம், நகுலகிரிப் புராணம், நகுலேசுவரர் விநோத விசித்திரக் கவிப்பூங்கொத்து** என்பனவாகும்.

இவ்வாலயத்திற்குத் திருப்புகழ்ப் பாடல் ஒன்றும் உண்டு. திருப்புகழில் இவ்வாலயம் **அருக்கொணாமலை** எனப் போற்றப்படுகின்றது. தலவிருட்சம் கல்லால்.

இவ்வாலயத் தீர்த்தக்கரைச் சூழலிலே பல அநுபூதிமான்களது சமாதிகள் உள. இவ்வாலயத்தைச் சூழப் பல திருமடங்களும் யாத்திரிகர் வசதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன. கதிரவேலுச் சிறாப்பர்மடம், சித்தங்கேணி வைத்திலிங்கம் மடம், தொல்புரம் கிருஷ்ணபிள்ளை மடம் போன்றவை குறிப்பிடத்தக்க சிலவாகும்.

1976இல் ஆரம்பிக்கப்பட்ட "சிவநெறிக்கழகம்" என்ற பெயருடைய சித்தாந்த சைவநெறி பரப்பும் மன்றம் ஒன்று, இன்று இவ்வாலயத்தோடொட்ட நின்று சைவமாநாடுகளையும், சைவக் கருத்தரங்குகளையும், சைவசமய அறிவுப்போட்டிகளையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## தடையின்றி உன்னடியை நாட
## வழிகாட்டும் நகுலேஸ்வரனே

மாசி பிறந்தது தேசு மிளிர்ந்ததுயர்
மகிமைம லர்ந்ததம்மா
மகிழ்நகு லேச்சர ஈசனின் நற்கொடி
ஏற்றமென் றொளிருமம்மா?
காசினி மீதருள் விழிதிறந் தெமைநிதம்
காக்கும் கறைகண்டன்
கறைமிடற் றோனருள் ஒளியினில் உளப்பிணி
மாய்ந்துடன் மறையுதம்மா

உமைதவம் காணில் எமதிடர் தீரும்
உவகையில் மனமோங்கும்
இமையது மூடி சிவனருட் காட்சியில்
இருவிழி நனையுமம்மா
அலைகட லோரம் ஆண்டவன் ஐயம்
ஏற்றிட வருங்காட்சி
நிலைகடந் தானவ இருளினை ஓட்டும்
வாழ்வொளி கூட்டுமம்மா

சிவனருள் காட்டும் தேர்வலம் காணில்
சிந்தையில் வரும்மாட்சி
சிவராத் திரியில் இவரடி மலரினில்
இருந்திட வரும்மீட்சி
தவம்நிறை வாக உதயன் மலர்ந்திட
கண்டகிக் கரைநாடி
தண்ணீர்ச் சுனையினில் ஆடிம கிழ்ந்திடும்
அற்புதத் திருக்காட்சி

கவலையில் வாடும் உயிர்க்கும் இன்ப
மருந்தென வேதிகமும்
கடும்பிணி சாப நிலையதும் மாற்றி
கவின்பெறு நிலைகூட்டும்
பவவினை மாற்றும் தவமுடை யோர்தம்
சமாதிகள் இசைபாடும்
பரமனின் திருவடி மலரினை தொழவரும்
தடையென்று மறைந்தோடும்?

ஆக்கம்: **சு. குகதேவன்,** தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவவேடப் பொலிவு

திரு. க. வடிவேலாயுதன், எம். ஏ.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவதிகை வீரட்டானத்துள் சமணரது கொடுமைகளை வென்று செல்லும் காட்சியைச் சேக்கிழார் பெருமான் ஒரு சிறந்த சொல்லோவியமாகக் காட்டுகின்றார். அப்பாடல் உண்மைச் சிவனடியார் சிறப்பை வரையறுத்துக் காட்டும் இலக்கணமாகவும் மிளிர்கின்றது.

"திருவதிகையாம் தொன்னநகரத்து மாந்தர் தொண்டரைத்
தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல் அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ் வாயும் உடையா" ராகக் கண்டனர்.

என்று கூறும் காட்சி மனத்தை விட்டு நீங்கா ஓவியமாகத் திகழ்கின்றது. சிவசின்னங்களாகிய தூய வெண்ணீற்றையும் கண்மணியினையும் குறித்ததோடமையாது மனத்தின் நெகிழ்ந்த தன்மையையும் பதிகச் செஞ்சொல்லன்றிப் பிறசொல் வழங்காத் திருவாயின் இயல்பையும் அருண்மொழித் தேவர் விளக்கியருளிய திறம் நீள நினைந்து இன்புறற்பாலது. ஆகவே புறச்சின்னங்களாகிய திருநீறும் கண்டிகையும் எவ்வளவு இன்றியமையாதனவோ அவற்றினும் அகச்சின்னமாகிய உளத்தூய்மையும் சொற்றூய்மையும் உண்மைச் சிவனடியார்களுக்கு மாறாத நல்லியல்பாயமைதல் வேண்டும் என்ற கருத்து உறுதி பெறுகின்றது. இதே கருத்தைத் தொண்டர் சீர்பரவுவார் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தே,

"சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாங் கருத்தும் கைஉழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத்தரசு"

என்று அப்பரடிகளது தோற்றப்பொலிவையும் உள்ளத்துறவையும் குறிக்கும் சொற்றிறம் போற்றற்பாலது. இச்சொல்லோவியத்தால் சொல்வேந்தரின் அன்பின் உறைப்பும் இந்தத் தொண்டின் சிறப்பும் தெற்றென விளங்குகிறது. இவற்றை விளக்கிய பின்பே புறச்சின்னங்களின் மேன்மையைச் சிறப்பிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவிடமாபாடியும் தந்த வள்ளலாகிய மாதவச் சிவஞானசுவாமிகள் காஞ்சிப் புராணத்துள்,

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து வாழ்வாம்

என்று அப்பரடிகள் வணக்கம் கூறும் செய்யுள் பொருட்செறிவுடைய ஒரு சிறந்த பாட்டாகும். இப்பாட்டில் அகப்புறச்சின்னங்களாகிய பேரன்பு, உழவாரத்தொண்டு முதலியவற்றைக் கூறும்போதே மெய்யின் இயல்புகளை விளக்கி இறுதியில் 'சிவவேடப் பொலிவழகு' என்ற சொல்லினைப் பெய்துள்ள திறம் சிந்திக்கத்தக்கது. சிவவேடத்திற்கு உயிரூட்டுவதும் பொலிவளிப்பதும் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றும் ஒன்றித்துத் தூய்மையோடிருப்பதுவேயாகும். அவ்வாறு திரிகரணங்களும் பொருந்தாத சிவவேடம் பொலிவடைவதில்லை என்ற கருத்தும் குறிப்பாக வலியுறுத்தப்படுவதை உணரலாம்.

மனம், சொல், உடம்பு என்ற மூன்றாலும் தூய்மையில்லாத போலி வேடத்தைச் சான்றோர் பலரும் கடிந்துள்ளனர். சிறப்பாக அப்பரடிகள் போலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடத்தைத் தாங்கும் இழிந்த இயல் புடையோரை எள்ளி நகையாடுவது போலவே பாடுகின்றார். சொல்வேந்தர்,

“நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவு நீருங்கண்டு
நக்கு நிற்பன் அவர் தம்மை நாணியனே”

“வேத மோதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதியங்கமோ ராறும் உணரிலென்
ஈசனையுள் குவார்க்கன்றி இல்லையே”

“நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்ற மேறி இருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்று மீசனென் பார்க்கன்றி இல்லையே”

என்ற பாடல்களில் போலி வேடத்தால் ஒரு பயனும்பெற இயலாது என்பதை வலியுறுத்தியுள்ளது கவனிக்கத்தக்கது.

இங்ஙனம் நம் சமயச் சான்றோர் திரிகரணங்களின் தூய்மையை விளக்கி யிருக்கவும் போலி வேடங்கள் எவ்வாறு தோன்றின என விளங்கவில்லை. சமய ஒழுக்கங்கள் கைவிடப்பெற்று வேடங்கள் மட்டும் நிற்குமேயாயின் அச்சமயங்கள் நிலைபெறா என்பது உலகறிந்த உண்மை. சமண சமயமும் பௌத்த சமயமும் இவ்வாறே நம்நாட்டில் அழிவினை எய்தின என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

நாம் வாழும் நூற்றாண்டின் இப் பகுதியிலே இந்துக்களிடை சமய எழுச்சி குறைந்துள்ளமை மிக வருந்தத்தக்க தாகும். கற்றவர்களாகக் கருதப்படுகின்ற பலருக்கு நம் சமயத்தின் அடிப்படை உண்மைகள் தெரிவதில்லை. சமய உணர்ச்சியுள்ளோர் சிலரும் வேடங்களே சமயம் எனத் தவறாகக் கருதி வருகின்ற னர். இந்நிலையில் மனமொழி மெய்களால் செய்யத்தக்கனயாவை என்பதை அறிந்து கொள்வது பெரிதும் வேண்டற்பாலதாம்.

முக்கரணங்களின் இயல்பினைத் திருக்குறள் போன்ற அறநூல்கள் நன்கு பிரித்துரைக்கின்றன. அது யாவருக்கும் பொருந்திய பொது மறையாகும். நால்வர் காலத்திற்கும் பின்னும் எழுந்த ஞானா மிர்தம் என்னும் நூல் ஒரு அகவற்பாவால் மனமொழி மெய்களின் இயல்பினைத் தெற்றென விளக்குகிறது. இது சைவர் களுக்குச் சிறப்பு நூலாக விளங்குகிறது. சிவஞான சுவாமிகளால் பெரிதும் எடுத்தாளப்பட்ட நூலாகும். சித்தாந்த சாத்திரம் பதினான்கினும் காலத்தால் முற்பட்ட ஒரு தமிழாகமம் என்ற சிறப்பினைப் பெற்ற பெருமறையாகும். சங்கச் செய்யுள் போன்ற நடையையுடைய அம்மறை நூல் உண்மைகளை ஆணித் தரமாகக் கூறும் தன்மை சுவையுடைய தாயுள்ளது. ஞானாமிர்தம் என்ற இப்பெரு நூலை இயற்றியவர் வாகீசமுனிவராவார். வாகீசமுனிவர் மனத்தின் தூய்மையை,

“இருள்தீர் காட்சியருளொடு புணர்தல் – அரும்பொறை தாங்கல் பிறன்பொருள் விழையாமை
செய்தநன் றறிதல் கைதவங் கடிதல் – பால்கோ டாதுபகலிற் றோன்றல்
மான மதாணி யாணிற்றாங்கல் – அழுக்காறின்மை யவாவிற்றீர்தல்
அருந்துயருயிர் கட்கிருந்த காலை – அழல் தோய் வன்ன ராகி யானாக்
கழலு நெஞ்சிற் கையற் றினைதல் – பன்னருஞ் சிறப்பின் மன்னுயிர்த் தொகைகட் (கு)
அறிவும் பொறியும் கழிபெருங் கவினும் – பெறற்கருந் துறக்கந் தம்மி னூஉங்கு
இறப்ப வேண்டுமென் றெண்ணரும் பெருங்குணம்”

என்ற முறையில் மிக நுண்ணிதாக விளக்கியுள்ளார்.

குற்றமற்ற மெய்யுணர்வு, அருளோடு எல்லா உயிர்களிடத்தும் கருணையுடைய னாதல், பொறுத்தற்கரிய வெகுளியும் துன்பமும் வந்தால் பொறுத்தல், பிறர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை விரும்பாமை, செய்த நன்றியை மறவாமை, தீயசிந்தனையை நீக்குதல், ஒரு பக்கத்தும் சாயாது நுகத்திற் பகலாணி போன்றிருத்தல் மானமாகிய பேரணி கலத்தை வீரத்தோடு தரித்தல், பொறாமையில்லாமை, பேராசையை நீக்குதல், பொறுத்தற்கரிய துன்பம் உயிர்களுக்கு உண்டான காலத்துத்தம்மை நெருப்பிலே போட்டாற்போலத் துன்புற்று அமையாத உருகும் நெஞ்சினராகிச் செயலற்று வருந்துதல், சொல்லுதற்கரிய மக்களுயிர்க்கு அறிவும், செல்வமும், பேரழகும் பெறுதற்கரிய சுவர்க்க பலமும் தம்மினும் மிகுதியாக உண்டாக வேண்டுமென்ற பெருங்குணமும் முதலியன மனத் தூய்மைக்கு இன்றியமையாதன.

'மானமதாணி ஆணிற்றாங்கல்' பிறர் நலம் பேணும் பெருங்குணம் போன்றவை ஆசிரியரது பெருமிதமான சொல்லாட்சித் திறத்திற்கு எடுத்துக் காட்டுகளாம்.

இனிச்சொல்லின் தூய தன்மையை வாகீச முனிவர், மீக்கொள அழகுபடச் சுருங்கக் கூறி விளங்க வைத்த திறம் போற்றுதற்குரியது.

அறம் பெரிது கரைதல் புறங்கூறாமை
வாய்மை கல்வி தீமையிற் றிறம்பல்
இன்மொழி யிசைத்தல் வன்மொழி மறத்தல்
அறிவுநூல் விரித்தல் அருமறை யோதுதல்
அடங்கிய மொழிதல் கடுஞ்சொல் லொழிதல்
பயனின்ற படித்தல் படிற்றுரை விடுத்தல்

மிகுதியாக அறத்தினை எப்பொழுதும் கூறுதல், பிறர் புறம் பார்த்துப் பொல்லாங்கு சொல்லாமை, மெய்யினையே சொல்லுதல், உயர்ந்த சாத்திரங்களைக் கற்றறிதல், பிறர்க்குத் தீமை பயக்கும் தீய சொற்களைச் சொல்லாமை, இனியவை கூறல், மறமான சொல்லைச் சொல்லா திருத்தல், அறிவு நூலாகிய ஆகமங்களை விரித்துரைத்தல், அரிய வேதங்களை ஓதுதல் மறைகளில் அடங்கிய மந்திரங்களைச் செபித்தல், கடிதாகச் சொல்லாமை, பயன் தரும் நூல்களையே படித்தல், பொய் சொல்லமை போன்றவை வாக்கின் தூய்மையை விளக்குவன.

'அறம் பெரிது கரைதல்' என்ற கருத்துத் 'திருமூலரது அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும், திறமறியார்' என்ற வாக்கோடு ஒத்துள்ளமை காணத் தக்கது. குறைந்த வரிகளிலே சிறந்த கருத்துக்களை விளக்கும் தன்மை இதினால் புலனாகின்றது.

காயத்தாலே செய்யத்தக்க நல்வினைகளை ஞானாமிர்தம்

அருந்தவந் தொடங்கல் திருந்திய தானம் – கொடைமடம் படுதல் படைமடம் படாமை
அமரர்ப்பேணல் ஆகுதி யருத்தல் – ஒழுக்கம் ஓம்பும் விழுப்பொருங்கிழமை
உடம்பிடியேந்தியுடல்தடிந்திடுநர் – அடைந்த காலை அவணியல்துயரந் தேரரால்லர் தெரிந்து மாருயிர் – பெரும்பிறி தாகஇரும்பிணமிசைஞரின்
ஓராங்குப் படாஅ மாசில் காட்சி – ஐம்பெரும் பாகத் தாழி நீந்தல்
இந்தியப் பெரும்படை யிரிய நூறும் – வன்றது கண்மை வாளிட்டாஅங்கு
நோவன செய்யினு மேவன விழைதல் – தவச்சிற தாயினு மிகம்பல விருந்து
மாத்தூண் மரீஇய திருவு மிரும்பொழில் – தன்மனைக் கிழத்தி யல்லதைப் பிறர்மனை
அன்னையிற் றீரா நன்ன ராண்மை – கார்கோ ளன்ன கயம்பல கிளைத்தல்
கூவல் தொட்டல் ஆதுலர்சாலை – அறங்கரை நாவின் ஆன்றோர் பள்ளி
கடவுள் நண்ணிய தடவுநிலைக் கோட்டம்
இணையவை முதல வருந்திறத்த புரத்தல் அறத்துறை

என்று மிக விரிவாகக் கூறுகின்றது.

அரிய தவங்களைத் தொடங்குதல் நல்லோர்க்குத் தானஞ்செய்தல், கொடை வழங்குதல், படையழிந்தார் மேல் ஆயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடாமை, தேவர்களை அருச்சித்தல், யாகங்களைத் தொடங்கி ஓமம் பண்ணுதல், ஒழுக்கமுடைமை, புலால் உணர்போர் பலர்கூடி, யாம் செய்யும் கொலை வினைக்கு நீவிர் ஒருப்படாவிடினும், யாம் அதுசெய்தற்குச் செல்லுங்கால் உடன்வரவேண்டும்; இன்றேல் வாளால் நும்உடம்பை வெட்டுவோம் என்று அவர் கூறும் போதும் உண்ணான் மறுக்கவே அவர் பிடித்து வருத்தினாலும் அப்பிணத்தின் போரோடு கூடாத குற்றமற்ற அறிவுடைமை, கொலை, களவு, கள் அருந்துதல், பொய் முதலிய பஞ்சமா பாதகக் கடலில் விழாது தப்புதல், ஐம்பொறிகளை வெல்லும் தறுகண்மை, வாளால் வெட்டினாற் போன்ற துன்பம் செய்தார்க்கும் அப்பொழுதே நன்மை செய்தல், செல்வம் சுருங்கிய காலத்தும் விருந்தோடு உண்டல், பெரிய நந்தவனம் வைத்தல், பிறர் மனைவியைத் தாயாகப் பார்க்கும் பேராண்மை, கடல் போன்ற ஏரிபல தோண்டுதல், கிணறு வெட்டுதல், மருத்துவச் சாலை நிறுவுதல், அறங்கூறு வோர்க்கு மடம் அமைத்துக்கொடுத்தல், ஆலயம் கட்டுதல், போன்ற புண்ணியச் செயல்களை உடம்பால் செய்யவேண்டும்.

உடம்பால் செய்யவேண்டிய செயல்கள் அனைத்தையும் ஆசிரியர் கூறிய திறம் அழகொழுக அமைந்துள்ளது. புலால் உண்ணுவோரோடு உயிர் போனாலும் உடல் உறைதல் கூடத் தீயதென் றெண்ணும் இவ்வாசிரியர் கருத்து யாண்டும் கூறப்பெறாத மிக உயர்ந்த கருத்தாகும். புலால் உண்ணாமைக்க இதைவிட வேறு வாதம் வேண்டுமோ?

சங்கச் சான்றோர் நடையில் பயின்ற இப்பாடற் கருத்தை மனத்துட் கொண்டு நடக்க முயல்வராயின் சிவவேடம் பொலிவு பெறுதற்கு ஐயமுண்டோ? சிவவேடம் இவ்வாறு பொலிவு பெற்றால் சிவநெறி உலகச் செந்நெறியாகும். சைவத்தின் மேற்சமயம் வேறில்லை என்ற கருத்து வெள்ளிடை மலையாகும். உண்மைச் சைவநெறி தழைத்தினி தோங்குக.

**நன்றி - சென்னை சைவசித்தாந்த சமாச வைரவிழாமலர்**

❒ ❒ ❒

# நிழல்

தருமலிங்கம், தன் பேருக்கு ஏற்ப அள்ளி வழங்கும் வள்ளண்மையுடையவர்.

அவருடைய மனைவி இதற்கு நேர்மாறானவள். கிள்ளியுந் தராத உலோபி.

“இது வீடா? தரும சத்திரமா? இப்படி நீர் அள்ளிக் கொடுத்தால் நம்ம கதி என்ன ஆகும்? நமக்க என்று நாலு காசு வேண்டாமா?” என்று முழங்கினாள்.

சில காலம் சென்றது

வைகாசி மாதம் முதல் வாரம் அக்கினி நட்சத்திரம் கொடிய வெய்யில் கொளுத்துகின்றது. கணவர், வீட்டுக்கு வந்தார். “பெண்ணே உன் தயார் வீட்டில் இருந்து தந்தி வந்திருக்கிறது. அவசரம் புறப்படு” என்றார்.

“யாருக்க என்ன இடரோ? என்று மதியும், கதியுங் கலங்கி அவள் கணவர்? வண்டி வராத வழியாக, நிழல் இல்லாத வழியாக மனைவியை அழைத்துக்கொண்டு நடந்தார். சற்று உடல் பருத்த அவள் துடித்துவிட்டாள்.

“என்னங்க............ எங்காவது நிழலைக் காட்டுங்கள். உயிர் போகின்றது” என்றாள்.

கணவரோ “என் மாணிக்கமே! உனக்குப் பின்னே உன் நிழல் காய்கின்றதே... அதில் ஒதுங்கிக்கொள்” என்றார்.

மனைவி, “உமக்கு அறிவு இருக்கின்றதா? என் நிழல் எனக்க உதவுமா? என்று எரிந்துவிழுந்தாள்.

“பெண்ணே! பாலும் தேனும் பாதாம் பருப்பும் இட்டு வளர்த்த இந்த உன் உடம்பின் நிழல் உனக்க உதவவில்லையானால், பெட்டியில் வைத்த உன் காசு உனக்கு உதவுமா? என்றார். அவள் அறியாமை அழிந்தது,

கருமி சேர்த்த வைக்கும் செல்வம், செழிப்பைத் தராது.

**-வாரியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறப்பு விருந்தினராகக்
கலந்துகொண்ட
திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர்-கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
அவர்கள்
உரையாற்றுகிறார்.


## மகளிர் இல்லப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.




சேக்கிழார் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்பதிப்பு : பிள்ளையார் நேரச்சகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.